Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை - 05 | 20-11-2004 | சனிக்கிழமை | ஓசை -276




## – வல்வெட்டித்துறை விளையாட்டு மைதானத்தில் –

# விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள் மீது உந்துருளியில் வந்தோர் துப்பாக்கிச்சூடு!

## இருவர்பலி; ஒருவர் படுகாயம்

(வடமராட்சி)

**யாழ். வல்வெட்டித்துறையில் சிதம்பராக்கல்லூரிக்கு முன்பாக உள்ள விளையாட்டு மைதானத்தில் நேற்றுமாலை விளையாடிக்கொண்டிருந்த இளைஞர்கள் மீது உந்துருளியில் வந்தோர் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூட்டில் இருவர் பலியாகினர். ஒருவர் காயமடைந்தார். பல இராணுவ முகாம்களாலும் காவலரண்களாலும் சூழப்பட்ட இப்பகுதியில் இத்துப்பாக்கிச்சூட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.**

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்கு முன்பாக உள்ள பொது விளையாட்டரங்கினில் உதைப்பந்தாட்டத்தில் கலந்து கொண்டிருந்த வீரர்கள் மீதே உந்துருளியில் வந்த இருவர் கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். துப்பாக்கிச் சூடு நடத்தியோர் உடலை மறைக்கும் வண்ணம் மழைக் கவசத்தை அணிந்திருந்ததுடன், முகத்தை மறைக்கும் வகையிலான தலைக்கவசத்தையும் அணிந்திருந்ததாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

தொண்டமனாறு வீதிப் பக்கத்தால் வந்து கொண்டிருந்த மேற்படி நபர்களில் உந்துருளியை ஓட்டி வந்தவர் மெதுவாக அதனைச் செலுத்த பின்னாலிருந்தவர் துப்பாக்கிப் பிரயோகத்தை விளையாடிக் கொண்டிருந்தவர்கள் மீது நடத்தினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரவு-செலவுத்திட்டம் குறித்து தமிழ்க் கூட்டமைப்பு அதிருப்தி

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் வரவு செலவுத் திட்ட அறிக்கை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவிக்கையில்; கடந்த வருடம் ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் தனது வரவு-செலவுத் திட்ட யோசனையில் சமாதான முயற்சிகளுக்கு முன்னுரிமை அளித்திருந்தது. ஆனால் இந்த அரசின் முதலாவது வரவு செலவுத் திட்டம் சில நன்மைகளை கொண்டிருந்தாலும் சமாதான முயற்சிகளைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இந்த வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பிற்கு 7,600 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது தமிழ் மக்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. யுத்தம் நிறுத்தப்பட்டு அமைதி நிலவிவருகின்ற சூழலில் இவ்வளவு கூடுதலான தொகை பாதுகாப்பிற்கு ஒதுக்கியிருப்பது நியாயமற்றது என்றார். சிறிலங்கா

(12ஆம் பக்கம் பார்க்க)

## திட்டமிட்ட முறையில் நடத்தப்பட்ட படுகொலை என்றே கருதுகின்றோம்

### – இரு இளைஞர்கள் கொலை குறித்து புலிகள் கண்டனம்

விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த அப்பாவி இளைஞர்கள் மீதான கொலை வெறியாட்டத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன் இது ஒரு திட்டமிடப்பட்ட வகையில மேற்கொள்ளப்பட்ட படுகொலை என்றே கருதுகிறோம் என யாழ். மாவட்ட அரசியல் துறையினர் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

வல்வெட்டித்துறையில் நேற்று இடம்பெற்ற இரு அப்பாவி இளைஞர்கள் மீதான துப்பாக்கிச் சூடு தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது. நேற்று மாலை 6.00 மணியளவில் வல்வெட்டித் துறை சிதம்பராக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த அப்பாவி இளைஞர்கள் மீது ஊந்துருளியில் வந்து தரித்து நின்ற தலைக்கவசமும், ஜக்கற்றும் முகத்திற்குக் கறுப்புத்துணியும் அணிந்த இருவர் ஜக்கற்றுக்குள் இருந்து ஏ.கே ரக துப்பாக்கியை எடுத்து சராமாரியாகக் கண்மூடித்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்-படையினர் சந்திப்பு இன்று நடைபெறாது

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்காப் படையின் உயரதிகாரிகளுக்குமிடையில் வவுணதீவு யுத்த சூனியப் பிரதேசத்தில் இன்று இடம்பெறவிருந்த இம் மாதத்திற்கான புரிந்துணர்வு சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பினரினதும் வேண்டுகோள் மற்றும் சீரற்ற காலநிலை காரணமாகவே இச்சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக போர் நிறுத்தக் கண்கானிப்புக் குழு அறிவித்துள்ளது.இரு தரப்பினருடனும் தொடர்புகொண்டு அடுத்த திகதி பின்னர் தீர்மானிக்கப்படுமென்றும் இதுபற்றி மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேப்பிட்டிய சுட்டுக்கொலை

### – மெய்ப்பாதுகாவலரும் பலி

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேப்பிட்டிய நேற்றுப் பிற்பகல் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்திற்கருகிலுள்ள கரணமாவத்தையில் அவரது வதிவிடத்துக்கு முன்னால் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதன்போது நீதவானின் மெய்ப் பாதுகாவலரும் கொலை செய்யப்பட்டுள்ளார். இதனையடுத்து கொழும்பிற்குள் நுழையும் வழிகள் அனைத்தும் அடைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. இச்சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது, போதைவஸ்துக் கடத்தலில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்ட ஒரு குழுவினருக்கு மரண தண்டனை விதித்துவிட்டு நீதிபதி வாகனத்தில் வந்திறங்கியபோது சுட்டுக் கொலை செய்யப்பட்டதாக கொழும்பு பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன கேரத் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தின்போது கொலையாளிகள் 252-0882 என்ற இலக்கத்தினையுடைய வானில் வந்து கொலையைப் புரிந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட வாகனம் தொடர்பாக ஏதாவது தகவல் தெரிந்தால் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு தகவல் தருமாறு இக்கொலை தொடர்பான விசாரணை செய்யும் குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினர் பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

இதேவேளை, இவ்வாகனம் நாரெஹன்பிட்டியப் பொலிஸ் கராச்சிக்கருகில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதென்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சரத் நுகேகொட தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட இந்த வாகனத்திற்கருகில் மற்றுமொரு வாகனம் எவரும் இல்லாத நிலையில்

(12ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா மாவட்ட

## மாவீரர்களின் பெற்றோர்களை தொடர்பு கொள்ளக் கோரிக்கை

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்டத்தில் உள்ள மாவீரர்களின் பெற்றோர்களை தமக்கு அருகில் உள்ள அரசியல் துறை செயலகங்களில் தொடர்பு கொள்ளுமாறு வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் வசிக்கும் மாவீரர்களின் பெற்றோர்களை தமக்கு அருகில் உள்ள பிரதேச அரசியல்துறை செயலகங்களிலோ, மாவட்ட அரசியல்துறை செயலகங்களிலோ தொடர்பு கொண்டு தமது மாவீரச் செல்வங்களின் பெயர் விபரங்களையும் அவர்களின் கல்லறைகள்,

(12ஆம் பக்கம் பார்க்க)



## மாவீரர் நாள் நவம்பர் -27

**"புயலாக எழுந்த பேராபத்துக்களை எல்லாம் மலையாக நின்று எதிர்கொள்ள, இரும்பை ஒத்த மனவுறுதி எனக்குத் தேவைப்பட்டது. இந்தச் சோதனை மிகுந்த நெருக்கடியான வரலாற்றுக் கட்டங்களில் எனக்குப் பக்கபலமாக-மனித மலைகளாக-உறுதியோடு நின்ற மாவீரர்களை நான் என்றும் மறக்க முடியாது. இந்த இலட்சிய வேங்கைகளின் தளராத உறுதிதான் எமது சுதந்திர இயக்கத்தின் தூண்களாக நிற்கின்றன."**

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

**தேசத்தின் குரலுக்கு அகவை பதினைந்து!**

தேசியத்தின் குரலாய்-ஈழ
தேசமதில் வலம் வரும் புலிகளின் குரலே-நீ
புதுமைகள் பல புரிந்து வாழ்க பல்லாண்டு என
தமிழீழத்தின் தேசிய நாளிதழ் வாழ்த்துகின்றது.

ஈழநாதம்


– சைவசமய துறவிகளின் ஊர்வலத்துடன் –

# "யோகர் சுவாமியும் கிளிநொச்சியும்" சிறப்புற நடைபெற்ற நூல் வெளியீடு

(அலுவக செய்தியாளர்)

சைவ சமயதுறவிகளின் வரவேற்பு ஊர்வலமும் "யோகர் சுவாமிகளும் கிளிநொச்சியும்" என்ற நூல் வெளியீட்டு விழாவும் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றன.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமிஆலய முன்றலிலிருந்து மங்கள இசையுடன் மகாதேவ ஆச்சிரம மாணவர்கள் நந்திக் கொடியுடன் முன்வர அதனைத் தொடர்ந்து துறவிகள்,






கல்விமான்கள் சமய பெரியார்கள் பின் தொடர யோகர் சுவாமிகள், மகாதேவ சுவாமிகளின் உருவப்படம் தாங்கிய ஊர்தி பின் தொடர பிரதான வீதிவழியாக ஊர்வலம் 11.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தினை வந்தடைந்து அங்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.ஆரம்ப நிகழ்வாக பேராசிரியர் அ.சண்முதாஸ் பொதுச் சுடரினை ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை கிளி.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் காண்டீபன் ஏற்றிவைத்தார்.நந்திக்கொடியினை மகாதேவ ஆச்சிரம் தவத்திருகணேசானந்த சுவாமிகள் ஏற்றி வைத்தார். மங்கல விளக்கேற்றலையடுத்து மண்டப நிகழ்வுகள் இடம்பெற்றன.

கிளிநொச்சி அரச அதிபர் தி. இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற மண்டப நிகழ்வில் கரைச்சி பிரதேச சபை விசேட ஆணையாளர் வரவேற்புரை நிகழ்த்தினார். ஆசியுரையினை தவத்திரு கணேசானந்த சுவாமிகள்,தவத்திரு செல்லத்துரை சுவாமிகள்,ஸ்ரீமத் ஆத்மகனானந்த மகாராஜ் சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ திருஞான சம்பந்த பரமச்சாரிய சுவாமிகள், சிவச்சாரியார் இரத்தினேஸ்வரக்குருக்கள் ஆகியோர் வழங்கினர், நூல் அறிமுக உரையினை மாவட்ட நீதிபதி திருநாவுக்கரசுவும், நூல் ஆய்வுரையினை சிவதமிழ்வித்தகர் சிவமகாலிங்கமும், நூல் வெளியீட்டுரையினை பேராசியர் அ.சண்முகதாசும் வழங்கினர் நூலின் முதற் பிரதியினை ஸ்ரீமத் ஆத்மகனானந்த சுவாமி வெளியிட்டுவைக்க, தவத்திரு செல்லத்துரை சுவாமிகள் பெற்றுக் கொண்டார். மகாதேவ ஆச்சிரம மாணவன் தி .ஸ்ரீரஜீவனின் பேச்சு இடம் பெற்றது தொடர்ந்து சிறப்புரையினை பேராசிரியர் சி.க சிற்றம்பலம், பேராசிரியர் திருமதி. நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் நிகழ்த்தினார். நற்சிந்தனை பாடல் போட்டியில் வெற்றியீட்டியோர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பெற்றனர். (சோ)


## துயர் பகிர்கின்றோம்

அமரர் செல்வரத்தினம சுகிர்தன்
(திவாகர்)

வட்டக்கச்சி தூயமணி முன்பள்ளி ஆசிரியை திருமதி. சு.ஜனனி அவர்களின் அன்புக்கணவர் அமரர் செல்வரத்தினம் சுகிர்தன் (திவாகர்) அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சி யுற்றோம். இவரது மறைவால் துயர்தோய்ந்துள்ள அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து நாமும் துயரினைப் பகிர்ந்து கொள்வதுடன், அன்னாரது ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டுகின் றோம்.

பணிப்பாளர்,பணியாளர்கள்,
ஆரம்பபிள்ளைப்பருவஅபிவிருத்திப்பிரிவு,
முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம்,
தமிழர் புனர்வாழ்வுக்கழம்,
கிளிநொச்சி மாவட்டம்.

(10768)


# தொடர் மழை வெள்ளத்தால் மக்களுக்கு தீங்கு ஏற்படலாம்

## - கிளி.பிரதி மா.சு.சே.பணிமனையினர் எச்சரிக்கை

(அலுவலக செய்தியாளர்)

தொடர்ச்சியாக மழை பெய்து வருவதனால் வெள்ள அபாயத் துடன் மக்களுக்கு பல தீங்குகள் ஏற்படலாம்.

சிறு கிடங்குகள், கிணறுகள் நிரம்பி அதில் இளம் பராயத்தினர் தவறுதலாக இறங்கி அல்லது விழுந்து உயிராபத்தை விளை வித்துக் கொள்ளலாம்.சமுதாய முன்னோடிகள் உங்கள் பக்கத் தில் இவ்வாறான அபாயம் இருப் பின் தகுந்த நடவடிக்கையை எடுங்கள்.

பிரயாணம் செய்பவர்கள் அவ தானமாக பிரயாணித்து விபத்துக் களையும் ஏனைய பின் விளைவு களையும் தவிர்த்துக் கொள்ளுங் கள்.

தொற்று நோய் ஏற்பட வாய்ப் புண்டு. கொதித்தாறிய நீரைப் பருகுங்கள்.

வெள்ளத்தின் பின்னர் வயிற் றோட்டம், நெருப்புக் காய்ச்சல், மலேரியா, டெங்கு போன்ற தொற்று நோய்கள் விரைவாக பரவக் கூடிய வாய்ப்புண்டு. அவதான மாக இருங்கள்.சுகாதாரப் பழக்க வழக்கங்களை கடைப்பிடியுங்கள்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவை பணிமனையினர் கேட்டுக்கொண் டுள்ளனர். (சோ)

## விபத்தில் மூவர் படுகாயம்

பளை நகர்ப்பகுதியில் நேற்றுமாலை 4.30 மணியளவில் உந்துருளியும், ஈருருளியும் மோதி விபத்துக்குள்ளாகியதில் மூவர் படுகாயம் அடைந்துள்ளனர். மேற்படி சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த உந்துருளியும் அதே திசையில் இருந்து வந்து கொண்ட ஈருருளியும் மோதியதில் உந்துருளியில் வந்த இருவரும், ஈருருளியில் வந்த ஒருவரும் காயமடைந்தனர். காயமடைந்தவர் களை உடன் பளை வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு சிகிச்சை அளித்த பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். மேல திக விசாரணைகளை பளை காவல்பணிமனையினர் மேற் கொண்டு வருகின்றனர். (11)

## சிரமதானப் பணி

தமிழீழ மாவீரர் தினத்தினை முன்னிட்டு மாவீரர் துயிலும் இல்லங்களில் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 16,17 ஆகிய நாட்களில் அளம்பில் மாவீரர் துயிலும் இல் லத்தில் செம்மலை மகாவித்தி யாலய மாணவர்கள், ஆசிரிய ர்கள், அதிபர், அளம்பில் றோ.க வித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்கள் ஆகியோர் சிரமதா னப் பணியில் ஈடுபட்டனர். (20)

## விண்ணப்பம் கோரல்

(நமது நிருபர்)

2005ஆம் ஆண்டுக்கான தையல் பயிற்சி பயிலுநர்களுக் கான விண்ணப்பம் கரவெட்டி பிரதேச செயலகத்தினால் கோரப் பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணசபை யினால் கோரப்படும் இப்பயிற்சிக் கான விண்ணப்பம் இறுதி நாள் 15.12.2004 இதற்கான மாதிரி விண்ணப்பம் பிரதேச செயலகத் தின் விளம்பரப் பலகையில் பார்வையிடலாம். (45)

## கிளி.யில் வீதிவிபத்தில் மூவர் படு காயம்

நேற்று மாலை கிளிநொச்சியில் இடம் பெற்ற வீதிவிபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர்.நேற்று மாலை 5.30 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கண்மையில் மிதிவண்டியும், உந்துருளியும் மோதிக் கொண்டன. கிளிநொச்சியிலிருந்து பரந்தன் நோக்கிச் சென்று கொண்டிருந்த மிதிவண்டி முன்னால் சென்ற கன்டர் வாகத்தின் நிறுத்தல் சமிக்ஞைக்கேற்ப நின்றபோது பின்னேவந்த உந்துருளி மோதியது. இதன் போது உந்துருளியும் பலத்த சேதம்திற்குள்ளானதோடு உந்துருளியில் பயணித்த இருவரும், மிதிவண்டியில் பயணித்த ஒருவரும் காயங்களுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றனர் (ச.தீ)


பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை
கிளிநொச்சி

## மீள் கேள்வி அறிவித்தல்

2004.11.15ஆம் திகதி நடைபெற்ற வைத்தியசாலைகளுக்கான உணவு வழங்கலுக்கான ஒப்பந்தகாரரைத் தெரிவுசெய்யும் கேள்விச் சபைக் கூட்டத் தில் இரத்துச் செய்யப்பட்ட மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சிக்குரிய ஒப்பந்தகாரரைத் தெரிவுசெய்யும் கேள்விச் சபைக் கூட்டமானது 2004.12.06 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற வுள்ளதால் கேள்வியாளர்கள் 2004.12.04 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி,
மா. சு. சே. பி. பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி-10625)



## 01ஆம் ஆண்டு நினைவநாள்

தாயின் மடியில் 26 10 1983



தாயக மண்ணில் 20 11 2003

நாட்டுப்பற்றாளர் அகிலன்
(நாகன் பிரதீபன்)
நாவற்காடு, வரணி

வானத்து நிலவாய் வைகறையில் உதித்த
எம் அன்புச் செல்வமே அகிலனே!
உன் வதன முகம் காணாது
துடிக்கின்றோம் நாம் இங்கு!
இன்னல்கள் பலகண்டு இதயம் சோராது
உன்பணி செய்ய கருத்தென நீயிருந்தாய்!
மின்னென வந்த காலனவன்
உன் மூச்சினை மின்னென அடக்கியே சென்றுவிட்டான்
வாழும் வயது உனக்கிருக்க
வாழாமல் சென்ற மர்மம் தான் ஏனோ!
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டு சென்றாலும்,
உன் ஆத்மா சாந்திபெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உன் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

நாகதம்பிரான்கோவில் வீதி
(உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.)

(5289)

# சூடானில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர அரசு-கிளர்ச்சியாளர் ஒப்பந்தம் கைச்சாத்து

## அமைதி திரும்பும் என ஐ.நா. நம்பிக்கை

**சூடானில் 21 வருடங்களாக நீடித்த சிவில் யுத்தத்திற்கு டிசம்பர் மாதம 31 ஆம் திகதியளவில் தீர்வு காணப்படும் எனத் தெரிவிக்கும் ஒப்பந்த மொன்றில் சூடான் அரசாங்கமும், தென்பகுதி கிளர்ச்சிவாதிகளும் நேற்று கைச்சாத்திட்டுள்ளனர்.**

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் இராஜதந்திர தூதுவர்கள் இந்த ஒப்பந்தத்தில் சாட்சிகளாக கைச்சாத்திட்டுள்ளனர். கென்யா தலைநகர் நைரோபியில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.


எண்ணெய் வளம் கொண்ட சூடானில் தென்பகுதி டார்பர் பிராந்தியத்தில் இடம் பெற்றுவரும் சிவில் யுத்தத்தை இந்த ஆண்டு இறுதியளவில் முடிவிற்குக் கொண்டுவரப்படும் எனத் தெரிவிக்கும் ஒப்பந்தத்தில் அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவரும், சூடானில் மக்கள் விடுதலை இயக்கத்தின் பிரதிநிதியும் கைச்சாத்திட்டுள்ளனர்.

21 வருடங்கள் நீடித்த யுத்தத்தினாலும் நோய் மற்றும் பட்டினியாலும் 20 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் இறந்துள்ளார்கள். ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை அதிகாரிகள் நியூயோர்க்கை விட்டு வெளிநாடொன்றுக்கு சென்றுள்ளமை 14 வருட காலத்துள் இதுவே முதல் தடவையாகும்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் சூடானில் டார்பர் பிராந்தியத்தில் இதுவரை காலமும் நிலவிவந்த மோசமான நிலை நீக்கப்பட்டு அமைதி திரும்பும் என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபிஅனான் தெரிவித்துள்ளார்.

### பிலிப்பைன்ஸ் வலியுறுத்து

உலக நாடுகளுடன் உறவுகளைப் பலப்படுத்தி ஈராக்கிய யுத்தத்தால் எழுந்த பதற்ற நிலையை தணிக்குமாறு பிலிப்பைன்ஸ் சனாதிபதி அமெரிக்க சனாதிபதியைக் கேட்டுள்ளார். சனாதிபதி புஷ் தனது இரண்டாவது பதவிக் காலத்தை இதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




ஈராக்கில் அமெரிக்கப்படைகளின் தாக்குதலால் சிறுவர் முதல் பல அப்பாவிகள் கொல்லப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மணிலாவில் அமெரிக்க தூதரகத்துக்கு முன்னால் நடைபெறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.

# ஐக்கிய நாடுகள் சபையை மறுசீரமைத்து நியாயமான சர்வதேச ஒழுங்கை நிலைநாட்டுக!

### -பிரான்ஸ் சனாதிபதி வலியுறுத்து

(லண்டன்)

ஐக்கிய நாடுகள் சபையை மறுசீரமைத்து, வலுப்படுத்தி அதனடிப்படையிலான நியாயமான சர்வதேச ஒழுங்கை நிலை நாட்டுமாறு பிரான்ஸ் சனாதிபதி ஜக்சிராக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



சிராக்குடன் பிளேயர்

வலுச்சமநிலையின் அடிப்படையிலான உலகத்தை உருவாக்குவது நெருக்கடிகளுக்கு வழிவகுக்குமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். லண்டனுக்கு விஜயம் செய்துள்ள அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் மேற்கு நாடுகள் உலகத்தின் மீது தமது கொள்கைகளை திணிக்கக் கூடாது. சனநாயகமயப்படுத்தலையும், மேற்கு மயப்படுத்தலையும் குழப்பிக்கொள்ளக் கூடாதென தெரிவித்துள்ளார். இவ்விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பங்களிப்பை வலுப்படுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆஸி.துணைப்பிரதமர் மீது லஞ்சக் குற்றச்சாட்டு

(கான்பரா)

அவுஸ்திரேலியாவின் துணைப் பிரதமர் ஜோன் ஆண்டர்சன் லஞ்சம் கொடுக்க முயன்றதாக குற்றஞ்சாட்டப்பட்டு உள்ளது. ஒக்டோபர் மாதம் நடந்த பொதுத் தேர்தலில் நியூசவுத் வேல்ஸ் மாநிலம் நியூ இங்கிலாந்து தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் டோனி விண்ட்சர். இவர் தான் துணைப் பிரதமர் ஜோன் ஆண்டர்சன் மீது குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

தேர்தல் போட்டியில் இருந்து விலகிக்கொள்வதற்காக எனக்கு லஞ்சம் தரத்தயாராக இருப்பதாக ஒரு தொழில் அதிபர் மூலம் எனக்குத் தூது அனுப்பினார் என்று கூறி இருக்கிறார்.

இந்தக் குற்றச்சாட்டை ஆண்டர்சன் மறுத்து இருக்கிறார். ஆண்டர்சன் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்று கூறி இந்தப் பிரச்சினைக்கு பிரதமர் ஹோவர்டு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.



வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதிசெய்யும் பேச்சுக்கள் நடைபெறும் தென்கொரிய தலைநகர் சியோலில் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தும் தென்கொரிய விவசாயிகள்.

# பலஸ்தீன மக்களுக்கு இருநூறு கோடி ரூபாய் நிதியுதவியளிக்க அமெரிக்கா விருப்பம்!

### -உலக நாடுகளுக்கும் நிதியளிக்க அழைப்பு

(வோஷிங்டன்)

பலஸ்தீன மக்களுக்கு இருநூறு கோடி ரூபாய் நிதியுதவியை நேரடியாக வழங்க அமெரிக்க சனாதிபதி புஷ் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

பலஸ்தீன-இஸ்ரேல் பிரச்சினையைத் தீர்க்க அமெரிக்கா ஆர்வமாக உள்ளது. இது குறித்த அமைதிப் பேச்சுவார்த்தைக்கு சனாதிபதி புஷ் தீவிர முயற்சி மேற்கொண்டார். எனினும், இரு தரப்பினரும் தொடர்ந்து தாக்குதலில் ஈடுபட்டதால், அந்த முயற்சி தோல்வி அடைந்தது. இதற்கிடையில் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் மறைவு அந்த இயக்கத்துக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்தச் சூழ்நிலையில் பலஸ்தீனம்-இஸ்ரேல் இடையில் அமைதியை ஏற்படுத்தும் விதமாக இருநூறு கோடி ரூபாய் நிதியுதவியைப் பலஸ்தீன மக்களுக்கு வழங்க புஷ் நிர்வாகம் முடிவெடுத்துள்ளது.

பலஸ்தீனத்துக்கு நிதி திரட்டும் நடவடிக்கையிலும் புஷ் அரசு ஈடுபட்டுள்ளது. இதற்காகத் தனது நட்பு நாடுகளை நிதியுதவி வழங்கும் படி கோரிக்கை விடுத்துள்ளது. யசீர் அரபாத் மறைவை அடுத்து புதிய பலஸ்தீன தலைவரைத் தேர்ந்தெடுக்க சனவரியில் தேர்தல் நடக்கிறது. அந்தத் தேர்தலுக்கும் உதவ புஷ் முடிவெடுத்துள்ளார்.

பலஸ்தீனத்துக்கு வழங்கப்படும் நிதிக்கு பலஸ்தீன நிதியமைச்சர் சலாம்பயத் பொறுப்பு வகிப்பார் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### கைதிகள் விடுதலை

மியான்மாரில் அண்மையில் கலைக்கப்பட்ட இராணுவப்புலனாய்வுப் பிரிவினால் தவறுதலாக கைது செய்யப்பட்டிருக்கலாம் என்று கருதப்படும் ஆயிரக்கணக்கான கைதிகளை அந்நாட்டு இராணுவ அரசாங்கம் விடுதலை செய்யத் தொடங்கியுள்ளதாக அறிவித்துள்ளது. நாட்டிலுள்ள பல்வேறு சிறைக்கூடங்களிலிருந்து 3937 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்நடவடிக்கை எப்போது பூர்த்தியடையும் என்று எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

# காஷ்மீர் குறித்த யோசனைகளுக்கு ஆக்க பூர்வமான பதில் எதுவுமில்லை

### -பாகிஸ்தான் சனாதிபதி கவலை

(இஸ்லாமாபாத்)

அரை நூற்றாண்டுகாலமாக பிரச்சினையில் இருந்து வரும் காஷ்மீர் விவகாரத்தில் தீர்வு காண்பதற்கு இருநாடுகளும் அளித்த உறுதிமொழிக்கமைவாக இந்தியாவிடம் இருந்து சமிக்ஞைகள் எதுவும் கிடைக்கவில்லையென்று பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்குமிடையில் பிரதம மந்திரிகள் மட்டத்தில் இன்னும் சில நாட்களில் பேச்சுக்கள் புதுடில்லியில் ஆரம்பமாக இருக்கும் நிலையில் பர்வேஷ் முஷாரப் கருத்து வெளியிட்டுள்ளார்.

முஷாரப்பின் நிலைப்பாடு பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையில் தற்சமயம் பிரிக்கப்பட்டிருக்கும் காஷ்மீரின் பகுதிகள் இராணுவ சூனியமாக்கப்பட வேண்டும் என்றும், அத்துடன் அப்பகுதிகள் ஐக்கிய நாடுகளின் தீர்மானத்திற்கமைய கூட்டுக்கட்டுப்பாடு அல்லது சுதந்திரமாக விளங்கும் நிலை ஏற்படுத்த வேண்டுமென்பதாகும்.

இந்த ஆண்டு சமாதான பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான கருத்துப்பரிமாற்றம் செப்ரெம்பர் மாதம் நியூயோர்க்கில் இருதலைவர்களுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுக்களின் பின்னர் பாகிஸ்தான் சனாதிபதியால் இந்த ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

# அயர்லாந்திற்கு முதலிடம்

உலகிலேயே சிறந்த நாடு அயர்லாந்து தான் என்று இங்கிலாந்தை சேர்ந்த நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்புக் கூறுகிறது. மக்கள் வாழ்வதற்கு ஏற்ற சிறந்த நாடு எது என்று அந்த நிறுவனம் நடத்திய கணக்கெடுப்பில் அயர்லாந்து தான் முதல் இடத்தைப் பிடித்து இருக்கிறது. இந்தியா இதில் 73 ஆவது இடத்தைப் பிடிக்கிறது. சீனா 60 ஆவது இடத்திலும் வங்காளதேசம் 77 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 93 ஆவது இடத்திலும் உள்ளது. மக்களின் வருமானம், வாழ்க்கைத்தரம், வேலைவாய்ப்பு, அரசியல் நிலைத்தன்மை, ஆண்பெண் சமத்துவம், தனிமனித சுதந்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.



ஈராக் தீவிரவாதிகளின் தாக்குதல் மொசூல்நகரில் கொல்லப்பட்ட ஈராக் பொலிசார்களின் உடல்கள் அருகில் பொதுமக்கள்.

# மாவீரர் நாளை சிறப்புற அனுஷ்டிக்க முள்ளியவளைப் பகுதியில் விசேட ஏற்பாடு

(முள்ளியவளை)

**தமிழீழ மாவீரர்நாளைசிறப்புறஅனுஷ்டிக்க முள்ளியவளைப்பிரதேசத்தில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் மேற்படி பிரதேச மக்கள், மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், துறைசார்ந்தோர் என பெருமளவானோர் சிரமதானப்பணியை மேற்கொண்டு வருகின்றனர்..**

சுழற்சிமுறையாக சிரமதானப் பணிகளை செய்துவருவதுடன்,வீதி ஓரங்கள்,பொது இடங்கள் என்பனவும் சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை மாவீரர்நாள் எழுச்சிப்பதாகைகள் கிராம, பிரதேச வீதிகளில் கட்டப்பட்டு எழுச்சிக் கோலம் ஆரம்பமாவதை அவதானிக்க முடிகின்றது.

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லம் இவ்வாண்டு புனரமைப்பு செய்யப்பட்டு பிரதான நுழை வாசல் மாற்றப்பட்டு அலங்கரிக்கப்பட்டுவருவதுடன் துயிலும் இல்லம் மற்றும் பிரதான வீதிகள் யாவும் ஒலிபெருக்கிகள் எழுச்சிப் பாடல்களை ஒலிக்க எழுச்சிக் கோலம் பூண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வினை முன்னிட்டு நாளை முள்ளியவளை தமிழ்வித்தியாலயத்தில் கட்டடநிர்மாண திறப்பு விழாவும்புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கலும், கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது .அன்றையநாள் மு.ப.10.00 மணிக்கு பாடசாலை முதல்வர் சு.வீரசிங்கம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதேவேளை நெடுங்கேணி கழிக்காடு மாவீரர் துயிலும் இல்லவளாகம் பொது மக்களால் சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

மாவீரர் தினநிகழ்வுகளை சிறப்புற நடாத்துவதற்கு ஏற்ற வகையில் பிரதேச அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் இச் சிரமதானப்பணிகள் மேற்கொள் ளப்பட்டன.

மாவீரர் தின நிகழ்வுகள் கழிக்காடு துயிலுமில்லத்திலும் சிறப்புற நடைபெறவுள்ளதெனஅரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர். (ஆ,கு,ச)

## லோறன்ஸ் நினைவாக சிறுவர் பூங்கா

(முள்ளியவளை)

மாவீரர் நாள் வாரத்தின் நான்காம் நாளான 24.11.2004 அன்று கரைதுறைப்பற்று பிரதேச சபை முள்ளியவளை உப அலுவலகத்தின் அனுசரணையுடன் முன்னாள் முல்லை மணலாறு இராணுவ பொறுப்பாளர் மாவீரர் லோறன்ஸ் நினைவு சிறுவர் பூங்கா முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தின்அருகாமையில் திறந்து வைக்கப்படவுள்ளது. (ஆ)

## நிதி ஒதுக்கீடு

(கிளி நொச்சி)

வட்டக்கச்சி, இராமநாதபுரம் உபதபாலகங்கள் புனரமைப்பிற்கு 8இலட்சத்து 80ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வட்டக்கச்சி உபதபாலகத்தின் புனரமைப்புப்பணிகளிற்காக 2இலட்சத்து 40 ஆயிரம்ரூபாவும், இராமநாதபுரம் உபதபாலகத்திற்கு 6இலட்சத்து 40ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வட்டக்கச்சி உபதபாலகத்தின் முழுமையான புனரமைப்புகளிற்கு இந்நிதி போதாமல் உள்ளமைகுறிப்பிடத்தக்கது. (15)

## திறப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க மத்திய நெற்களஞ்சியம், பல்பொருள் விற்பனை மையம் என்பவற்றின் திறப்பு விழா இன்று 20ஆம் திகதி காலை 9.30 மணிக்கு உருத்திரபுரம் வைத்தியசாலைக்கு அருகாமையில் இடம் பெறுகின்றது.

கரைச்சி தெற்கு.ப.நோ.கூ.ச. தலைவர் நா. குகராசா தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசஅதிபர் தி.இராச நாயகம் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு நெற்களஞ்சியத்தினையும், பல்பொருள் விற்பனை மையத்தினையும் வைபவரீதியாகத் திறந்து வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# சமூக வலுவூட்டாளர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிப்பு

நியாப் செயற்திட்டத்தின் வகையில் 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சேவையாற்றிய சமூக வலுவூட்டாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப்பணியகத்தில் நிர்வாகஅலுவலர் மா.ஜெறாட் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் சுடரினை முல்லைத்தீவு மாவட்ட நியாப் பிரதித்திட்டப் பணிப்பாளர் சிவகுமார், கிளிநொச்சி மாவட்ட நியாப்திட்டப் பணிப்பாளர் வினோதராஜா, தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டக் கண்காணிப்பு பிரிவுப் பணிப்பாளர் ஜெகாஸ்,ஆகியோர் ஏற்றிவைத்தனர் அடுத்ததாக வரவேற்புரை, தலைமையுரையினைத் தொடர்ந்து சிறப்புரைகளை வினோதராஜா, ஜெகாஸ்,தவமோகன், சிவபாலன், ராஜா, சிவகுமார் ஆகியோர் நிகழ்த்தினர்.தொடர்ந்து தமிழர் புனர்வாழ் வுக் கழகத்தின் சமூக வலுவூட்டல் வேலைத்திட்டங்களில் நியாப் செயற்திட்டத்தில் 2003 ஆம் ஆண் டில் பங்கேற்று செயற்பட்ட 60 சமூக வலுவூட்டாளர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# அணைக்கட்டின் மேல் வாகனம் செலுத்தத்தடை

புதுமுறிப்பு அணைக்கட்டின் மேலாக வாகனங்களைச் செலுத்த வேண்டாம் எனவும், இதனால் குளத்தின் அணைக்கட்டில் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டெனவும் இதனை நடைமுறைப்படுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றது. (சோ)

# இரணைமடு பட்டு உற்பத்திப் பண்ணை ஊழியரின் உறுப்பினர் இலக்கம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி-இரணைமடு பட்டு உற்பத்திப் பண்ணையில் கடமை புரிந்து நீண்டகாலமாக தொடர்பற்றிருந்ததனால் அவர்களது உறுப்பினர் இலக்கங்கள் தெரியாது ஊழியர் சேமஇலாபநிதியைப் பெற முடியாத ஊழியர்களின் கஷ்ரத்தைப் போக்க தலைமைச் செயலகத்திலிருந்து பெயரும் உறுப்பினர் இலக்கங்களும் பெறப்பட்டுள்ளன-

அவற்றின் விபரம் வருமாறு

ஏ/12121-1173 M.சிவமோகன், ஏ/12121-1174 S.சேதுபதி, ஏ/12121-1175 M.கம்பன், ஏ/12121-1176 S.விஜயரத்தினம், ஏ/12121-1177 K.குமாரசாமி, ஏ12121-1178 U.சிவலிங்கம், ஏ/12121-1179 I.நிவேந்திரன், ஏ/12121-1180 V.விமலகுலேந்திரன், ஏ/12121-1181 P.தவராசா, ஏ/12121-1182 P.ரவிக்குமார், ஏ/12121-1183 S.கந்தையா, ஏ/12121-1184 S.சண்முகநாதன், ஏ/12121-1185 K.ரட்ணசிங்கம், ஏ/12121-1186S.பரமானந்தன்,ஏ/12121-1187 K.பரமலிங்கம், ஏ/12121-1188K.மரியதாஸ், ஏ/12121-1189 M.சண்முகதாஸ், ஏ/12121-1190 K.கிருஸ்ணநந்தன், ஏ/12121-1192 K.தவராசா, ஏ/12121-1193 S.அருந்தவநாதன், ஏ/12121-1194 S.E.F.கிங்கிலி, ஏ/12121-1195 A.G.நவநாதன்,ஏ/12121-1196 U.தயாளன், ஏ/12121-1197 M.வரதராசா, ஏ/12121-1198 K.ஜெயக்குமார், ஏ/12121-1199 K.நாகராசா, ஏ/12121-1200 K.வரதராஜா,ஏ/12121-1201 S.கனகலிங்கம், ஏ/12121-1202 S.மகேந்திரன்,ஏ/12121-1203 K.சதானந்தன், ஏ/12121-1204 S.வீரசிங்கம், ஏ/12121-1205 K.தர்மகுலசிங்கம்,ஏ/12121-1206 R.நாகேந்திரராசா, ஏ/12121-1207 M.புவேந்திரன்,ஏ/12121-1208 S.மணிவண்ணன், ஏ/12121-1209 S.தவராசா, ஏ/12121-1210 S.புவனேந்திரன் (சோ)

-திருநெறிக்கழக பரீட்சையில்-

# சிறப்புப் புள்ளிபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட திருநெறிக்கழகத்தால் நடாத்தப்பெற்ற சைவ நெறிப் போட்டிப் பரீட்சையில்சிறப்பு புள்ளிகளைப் பெற்ற (தரம்11) மாணவர்களும் பண்ணிசைப் போட்டியில் முதன்மை பெற்ற மாணவர்களும், பதக்கம், பரிசு,சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேற்படி நிகழ்வு நாள் 21 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு கிளிநொச்சி ம.வியில் நடைபெறவுள்ளதெனவும், பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், சைவ அன்பர்களை தவறாது கலந்து நிகழ்வை சிறப்பிக்கும் வண்ணம் கிளிநொச்சி மாவட்ட திருநெறிக்கழகத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)



கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம் 30 இலட்சம் ரூபா செலவில் புதிதாக கொள்வனவு செய்துள்ள எரிபொருள் பவுசர் (படம் சோதி)

-கிளி.பிரமந்தனாறு மகாவித்தியாலய-

# 15ஆம் ஆண்டு நிறைவு விழாவும் புதிய கட்டடத் திறப்பு விழாவும்

(கண்டாவளை)


கிளி/பிரமந்தனாறு மகாவித்தியாலயத்தின் 15ஆம் ஆண்டு நிறைவு விழாவும், புதிய மாடி வகுப்பறைக் கட்டடத் திறப்பு விழாவும் கடந்த புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை முதல்வர் க.ச.சிவலிங்கம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றி தமிழீழ தேசியக் கொடியையும் விசுவமடு பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் பு.திலகன் ஏற்றி வைத்தார். மங்கல விளக்கை கிளி/அரச அதிபர் தி.இராசநாயகம், கிளி/ வலயக்கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து மாடிக் கட்டட பிரதான மண்டபத்தை கிளி/அரச அதிபர் பெயர்ப் பலகை திரை நீக்கம் செய்து நாடாவை வெட்டித் திறந்து வைத்தார் அடுத்து மேல் மாடி கட்டட மண்டபத்தை நிகொட் நிறுவன திட்டப்பணிப்பாளர் பார்த்தீபன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.


தொடர்ந்து வகுப்பறை, மண்டபங்களை கண்டாவளைப் பிரதேச செயலர் சத்தியசீலன், கரைச்சி கோட்ட கல்விப்பணிப்பாளர், திருமதி இ.அரியரத்தினன்ம், கண்டாவளை கோட்ட கல்விப்பணிப்பாளர் வீ.இராஜகுலசிங்கம் ஆகியோர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர். அடுத்து செயற்பாட்டு மண்டப கட்டடத்தை கிளி/வலயக் கல்விப் பணிப்பாளர் பெயர்ப் பலகை திரை நீக்கம் செய்து நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். தொடர்ந்து விஞ்ஞான ஆய்வு கூட கட்டடத்தை கிளி/வலயக் கல்விப்பணிமனை கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப் பணிப்பாளர் க.வைரமுத்து பெயர்ப் பலகை திரைநீக்கம் செய்து நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் கிளி/வலயக் கல்விப்பணிப்பாளர், சிறப்பு மலரை வெளியிட முதல் பிரதியை கிளி/ அரச அதிபர் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து மலர் வெளியீட்டுரையை இதழ் ஆசிரியர் ப.ரங்கநாதன் நிகழ்த்தினார். அடுத்து பாடரீதியாகவும், விளையாட்டுத்துறையிலும் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை கரைச்சி கோட்ட கல்விப்பணிப்பாளர் வழங்கி கௌரவித்தார்.

தொடர்ந்து G.T.Z நிறுவன இணைப்பாளர் சு.தர்மரட்ணம் கிளி/ அரச அதிபர், கிளி/ வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் சிறப்புரையாற்றினர். (14)



வவுனியா அரச முறிப்பில் உலகவங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்புத்திட்ட திறப்பு விழாவில் வவுனியா மாவட்ட தேசிய எழுச்சி அமைப்பின் தலைவர் திரு. செ. சபாநாதன் அவர்கள் வீடு ஒன்றினை திறந்து வைப்பதனையும் நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (படம்:-ஆறு சுபாஸ்கரன், வவுனியா செய்தியாளர்)








தமிழீழ மண்ணிற்காய் தங்கள் இன்னுயிர்களைத் தியாகம்செய்த மாவீரர்களை நினைவுகூரும் மாவீரர்நாள் எதிர்வரும் 27ஆம் திகதி உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. மாவீரர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சியின் பல பகுதிகளிலும் மாவீரர்களின் தியாகங்களைச் சித்தரிக்கும் மாவீரர் நினைவு வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளதைப் படங்களில் காணலாம். (படங்கள் :- செல்வா)

## பெண்களுடன் சேட்டைவிட்டவருக்கு இளைஞர் குழு எச்சரிக்கை

பெண்களுடன் சேட்டைவிட்ட இளைஞர் ஒருவர் கலாச்சாரத்தைப் பேணும் இளைஞர்களினால் பிடிக்கப்பட்டு மக்கள் முன்னிலையில் கடும் எச்சரிக்கை செய்து விடப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பேருந்து நிலையப் பகுதியில் உள்ள கடைகளின் முன்னும் மற்றும் பேருந்து நிலையத்தினுள் நின்றும் இளைஞர்கள் அங்கு வரும் பாடசாலை மாணவர்கள் மற்றும் வயதுவந்த பெண்களுடனும் விரும்பத்தகாத பேச்சுக்களைப் பேசியதை அவதானித்த வலி தெற்குப்பகுதி கலாச்சாரத்தைப் பேணும் இளைஞர்கள் பேருந்து நிலையப் பகுதியில் பாடசாலை மாணவியுடன் சேட்டை செய்ய முயன்ற இளைஞரைப் பிடித்துக் கடுமையாக எச்சரிக்கை செய்து பொதுமக்கள் முன்னிலையில் மன்னிப்புக் கேட்ட பின்னரே செல்ல அனுமதித்தனர். 41)

## சிரமதானம்

மாவீரர் தினத்தை முன்னிட்டு எழுதுமட்டுவாள் தொடங்கி நாவற்குழி வரை உள்ள பிரதான சாலையைச் சிரமதானம் செய்ய முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது. இதற்கென பிரதானசாலையில் அமைந்துள்ள பாடசாலை மாணவர்களால் இச் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.(28)

## கருத்தமர்வு

மனித உரிமைகள் தொடர்பான அறிவினை ஊட்டும் வகையிலான தொடர் கருத்தமர்வுகளின் ஒரு பகுதியாக நேற்றுமுன்தினம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக் கருத்தரங்கில் பாராளுமன்ற உறுப்பினர் சி.கஜேந்திரனும் கலந்துகொண்டிருந்தார்.

**- சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் -**

## தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளின் வெற்றிபெற்றோர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை இரவு 8.00 மணிக்கு சர்வதேச தமிழீழ மாண வர் பேரவையில் மாவீரர் நாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட விவாதச் சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டிக்குத் தெரிவான யாழ். பல்கலைக்கழக அணிக்கும், யாழ். கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அணிக்கும் இடையிலான விவாதச் சுற்றுப்போட்டியும், இச்சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கான பரிசளிப்பும் பங்கு பற்றிய அனைத்து போட்டியாளர்களுக்குமான பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் மாணவர் பேரவைத் தலைவர் ப. பகீரதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அத்தோடு தமிழீழத் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோரில் தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வும், தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனைகள் அடங்கிய சிறிய கைந்நூல் ஒன்றும் மாவீரர் நாளையொட்டிய மாவீரர்களின் தியாகங்கள் பற்றிய சிறிய கவிதை ஒலி நாடா ஒன்றும் வெளியிடப்படவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் சு.மோகனதாஸ், (துணைவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்) அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக சி.இளம்பரிதி (பொறுப்பாளர்- அரசியல்துறை யாழ். மாவட்டம்) செல்வி கலைவிழி (பொறுப்பாளர்- மகளிர் அரசியல்துறை யாழ் மாவட்டம்) செ.கஜேந்திரன் (பாராளுமன்ற உறுப்பினர் யாழ். மாவட்டம்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (36)



தமிழீழத் தேசியத்தலைவரின் 50ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவர்கள் 5000பனம் விதைகள் நடு கையினை நந்திக்கடல் வெட்டையில் மேற்கொள்கின்றனர் இதில் அதிபர், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். (படம்:- சகீலா)

## சமூக சேவை உத்தியோகத்தர்களை சந்திக்க மக்கள் பெரும் சிரமம்!

(நல்லூர்)

யாழ்.குடாநாட்டில் தொடர்ந்து பெய்த மழைகாரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் சமூக சேவை உத்தியோகத்தர்களை சந்திப்பதில் பெரும் சிரமம் அடைந்து வருகின்றார்கள்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கானபயிற்சிவகுப்புக்கள் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவிலும் நடைபெற்று வருகின்றன. வடக்கு கிழக்கு மாகாண சபையின் பொறுப்பில் இடம்பெறும் இப் பயிற்சி வகுப்புக்களுக்கு மாகாண சபை ஊழியர்கள் இணைப்பாளர்களாக பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் மாகாண சபையின் அலுவலர் தரத்தைச் சேர்ந்த சமூக சேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், கலாச்சார உத்தியோகத்தர் போன்றவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மக்கள் பரவலாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டும் மற்றும் வீடுகள் இடிந்து வீழ்ந்தும் மரங்கள் முறிந்து வீடுகளின் மேல் வீழ்ந்து சேதம் அடைந்தவர்கள் எனப் பல் வேறு பிரச்சினைகளுடன் மற்றும் மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்கள் எனப் பலரும் அலைகின்றார்கள்.

உரிய உத்தியோகத்தர்கள் தற்போது முழுமையாக பிரதேச செயலகங்களில் இருந்து விடுபட்டு வேலையற்ற பட்டதாரிகள் பயிற்சி வகுப்பிலேயே நிற்பதன் காரணமாக இவ் அவல நிலைமை ஏற்பட்டுள்ளது.நாட்டின் சூழ் நிலைக்கு ஏற்ப உரிய உத்தியோகத்தர்களை கடமைக்கு அழைக்க வேண்டும் எனப் பொது அமைப்புக்கள் கூறுகின்றன. (41)

## எள்ளுக்குளம் மாவீரர் துயிலும் இல்ல சிரமதானப்பணிகள் தொடர்கிறது

எள்ளுக்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் பெருமளவிலான பொது மக்கள், மாணவர்கள், திணைக்கள ஊழியர்கள், வர்த்தகர்கள் என வயது, பால் வேறுபாடின்றி சிரமதானப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். 17.11.2004 ஆரம்பமான சிரமதானப்பணிகளில் மழை, வெய்யில் பாராது தொடர்ந்து மக்கள் சளைக்காமல் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். மேற்படி மாவீரர் துயிலும் இல்ல சிரமதானப்பணிகளை தமிழீழ எழுச்சிப் பேரவையின் கரவெட்டிப் பிரதேச செயலகத்தினர் ஒழுங்குபடுத்தினர் என கரவெட்டி அரசியல் துறையின் அலுவலக இணைப்பாளர் பேபி அவர்கள் தெரிவித்தார். மேலும் சிரமதானப்பணிகள் 24.11. 2004 ஆம் திகதி வரை நடைபெறும்.

## அரசின் சமாதான கிராமத் திட்டம் வெறும் கண்துடைப்பு நடவடிக்கை

### -வடமராட்சி வெகுசன அமைப்புக்கள் விசனம்


(வடமராட்சி)

சிறிலங்கா அரசின் நீதி இனவிவகார நல்லிணக்க அமைச்சின் சமாதானத்திட்டத்தின் கீழ் யாழ்குடாநாட்டில் சமாதான கிராமமாக தெரிவு செய்யப்பட்டுள்ள வடமராட்சி கப்புதூ கிராமத்தை சேர்ந்த 50 குடும்பங்களிற்கு உணவு பொருட்களல்லாத உதவிப்பொருட்கள் நேற்று முதல் வழங்கப்பட்டன.

இவ்வாண்டின் ஓகஸ்ட் மாத முற்பகுதியினில் இங்கு விஜயம் செய்திருந்த சமாதான திட்டத்திற்கான பணிப்பாளர் கலாநிதி லக்சிறி பெர்னாண்டோ தலைமையிலான குழுவே, தற்போது மீண்டும் திரும்பிவந்து இவ் உதவிப் பொருட்களைக் கையளித்துள்ளது. இந் நிகழ்வில் கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப் பதிகாரி ஆர்.பி.றுவன் சந்திரசேகர ஆகியோருடன் அமைச்சின் உயரதிகாரிகள் குழுவொன்றும் வருகை தந்து கலந்து கொண்டிருந்தது.

இனங்களுக்கிடையேயான சமாதானத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பிலான புதிய அரசின் சமாதானக் கிராமம் திட்டத்தின் கீழ் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிற்கு உதவும் நோக்கிலேயே அரசினால் இவ்வுதவிகள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றன.

எனினும் வடமராட்சி மற்றும் தென்மராட்சிப் பிரதேசங்களிற் கிடைப்பட்டதும். மிகவும் பின் தாங்கிய நிலையிலுமுள்ள கப்புதூ கிராம மக்களிற்கு நிறைவு செய்யப்பட வேண்டிய தேவைகள் எவ்வளவோ இருக்க கண்துடைப்புப் போன்று வழங்கப்படும் இச் சிறு உதவிகள் மூலம் சிறிலங்கா அரசு விளம்பரத்தை தேடிக்கொள்ள முற்படுவதாக வடமராட்சி வெகுசன அமைப்புக்கள் ஒன்றியம் குற்றம் சாட்டியுள்ளது. போதிய பாடசாலைக் கல்வி வசதி, குடிநீர் வசதி, மின்சாரவசதி, மருத்துவ வசதி மற்றும் போக்குவரத்து வசதியென எதுவுமே அற்ற நிலையிலே கப்புதூ உள்ளது. அத்துடன் கடந்த கால யுத்த அனர்த்தங்களாலும இடப்பெயர்வினாலும் அப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.இந் நிலையில் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைக் கூட ஏற்படுத்தி வழங்கத் தயாராக இல்லாத சிறிலங்காஅரசு இவ்வாறான நிகழ்வுகள் மூலம் இலவச விளம்பரத்தைத் தேடிக் கொள்வதை அனுமதிக்க முடியாதெனவும் அவ் வட்டாரங்கள் மேலும் கருத்து வெளியிட்டுள்ளன. (27)



முல்லைத்தீவு செம்மலை கிழக்கு நாயாற்று10ஆம் கட்டையில் J.R.S. நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 27 தற்காலிக வீடுகளில் முதலாவது வீட்டினை முல்லைப் பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் திறந்து வைக்கின்றார். (படம் - சகீலா)

# செவ்வாய்க்கிரகத்தில் பக்ரீரியா (ஒற்றைக்கல் உயிரினம்)

உலகிலுள்ள பல விண்வெளி நிலையங்கள் தற்போது செவ்வாய்க் கிரகம் தொடர்பாக பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன. அவ்வாய்வுகள் அக்கிரகத்தில் உயிரினங்கள் வாழ்கின்றனவா, நீர்காணப்படுகிறதா அங்கு எதிர்காலத்தில் உயிரினங்கள் வாழ சாத்தியம் காணப்படு கின்றனவா என்பது பற்றி எல்லாம் ஆய்வுகளை மேற் கொள்கின்றன.

ஆயினும் அமெரிக்க நாசா நிறுவனம் நடத்திய அண்மைய ஆய்வுகள் செவ்வாய்க்கிரகத்திலிருந்து கொண்டு வரப்பட்ட மண் மாதிரியில் பக்ரீரியா கிருமிகள் காணப்படுவதாகக் கூறியுள்ளது.

நாசா நிறுவனத்தில் ஜெற் புறொபல்சன் ஆய்வு நிலைய அதிகாரியான கஸ்தூரி வெங்கடேஸ்வரன்"மார்ஸ்பாஸ் பைண்டர் றோவர்" என்ற விண்கலத் தின் சில்லுகளில் இருந்த மண் ணை ஆய்வு செய்ததில் " பசி லஸ் சாபன்சிஸ்'' (BACILLUS SAFENSIS) எனும் கிருமி இருந்ததை அவதானித்துள்ளார்.



செவ்வாய்க் கிரகத்தைப் பொறுத்தவரை அதன் வளிமண்டலத்தின் தடிப்பு புவியின் வளி மண்டலத்தை விடக்குறைவானதாகும். அங்கு காணப்படும் காபனீரொட்சைட்டின் அளவு 95 வீதமாகும். நைதரசன், ஆகன் என்பவற்றின் ·அளவு முறையே 27,16 வீதங்களாகும், ஒட்சிசன், காபன் மொனொக்சைட் போன்றவை சிறிதளவு காணப்படுகின்றன. இவை ஆய்வுகள் மூலம் வெளிவந்த தகவல்கள் ஆகும்.

தற்போதுஇனம் காணப்பட்டுள்ள பக்ரீரியா, குளோரபில், தெளிவான கருவுடன் கூடிய ஒரு ஜீவ அணு எனக் கூறப்படுகிறது. அவையும் மூன்று பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. அவை கொக்கோ விதை, சிலிண்டர், திருகு ஆணி என்பவற்றின் உருவத்தை ஒத்த வடிவங்களாக இனம் காணப்பட்டுள்ளன. அவற்றின் சுவர்கள் மிகவும் மெல்லியதானது அவை சைலயுலஸ், கைட்டின் எனும் திரவத்தைக் கொண்டிருக்கின்றன. இனப்பெருக்கத்தின் மூலம் பெருகும் ஒற்றைக் கலகருவாகும் எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அன்றியும் இனப்பெருக்கத்தின் மூலம் அல்லாமலும் இவை பெருகும் என்றும் தெரிவிக்கப்படுவதுடன் சிதைவடைவதன் மூலமும் இவை பெருகும் என தெரிவிக்கப்படுகின்றது.

பச்சை இனத்தாவரங்கள் போன்றுஇவை காபனீரொட்சைட், நீர் போன்ற காபனல்லாத பொருட்களிலிருந்து போஷிக்கக் கூடியதல்ல அவை பெருகும் காபன் செறிந்த திரவங்களில் இருந்தே அவை போஷிக்கின்றன. அவை சுய போஷிணி எனக் கூறப்படுகின்றன.


கஸ்தூரி வெங்கடேஸ்வரன் என்ற ஆய்வாளரும் கலிபோர்னியாவிலுள்ள விண்வெளி ஆய்வாளரும் இணைந்து நடத்திய ஆய்வில் பசிலஸ் என்ற கிருமியில் மேலும் 32 இனங்கள் காணப்படுவதாகவும் அவை A.B.C.D.E.F எனவும் பகுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் 2005 ஆம் ஆண்டிலும் 2007 ஆம் ஆண்டிலும் 2009 ஆம் ஆண்டிலும் செவ்வாய்க் கிரகத்தை நோக்கி பயணங்கள் தொடரவுள்ளன. இவைஅங்கு உயிரின வாழ்க்கை சாத் தியம் பற்றியும் நீர்வளம் பற் றியும் ஆய்வுகளை மேற் கொள்ள விருப்பது குறிப்பிடத்தக்கது.

## 23 கோடி வருடங்களுக்கு முன் வாழ்ந்த ஆமைகள்

23 கோடி வருடங்களுக்கு முன் வாழ்ந்த கடல் ஆமைகளின் உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


இவை முட்டை போட்டனவா? குட்டிகளை ஈன்றனவா? என்பது புரியாத புதிராக இருந்தது. அண்மையில் கிடைத்துள்ள கர்ப்பம் தரித்த இரு கடல் ஆமைகளின் எச்சங்கள் இதனை வெளிப்படுத்தியுள்ளன. இவ் உயிரினங்கள் குட்டி ஈனுவதை இலகுவாக்கும்



வகையிலான அசையக் கூடிய இடுப்பு எலும்புகளை கொண்டிருந்ததாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக் கண்டுபிடிப்பின் மூலம் உடற்கட்டமைப்பை ஒப்பிட்டு ஏனைய கடல் ஆமைகள் ஆணா பெண்ணா என்பதையும் விஞ்ஞானிகள் கண்டறிவதற்கு உதவியுள்ளது.

## ஒலியைவிட 10 மடங்கு வேகத்தில் செல்லக் கூடிய ஜெற் விமானம், அமெரிக்கா கண்டு பிடித்தது

அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான "நாசா" புதிதாக தயாரித்த அதிவேக ஜெற் விமானம் பறந்து உலக சாதனை படைத்திருக்கிறது. பசிபிக் கடலுக்கு மேலே இந்த அதிவேக 'எக்ஸ்-43' ஜெற் விமானம் பறக்க விடப்பட்டது. மணிக்கு 7,000 மைல் வேகத்தில் இந்த ஜெற்விமானம் பறந்து உலக சாதனை படைத்தது. முன்னதாக இந்த ஜெற் விமானம் ஒரு பூஸ்டர் ரொக்கெட் மூலம் 1 லட்சத்து 10 ஆயிரம் அடி உயரத்தில் கொண்டு செல்லப்பட்டது. பிறகு அந்த ரொக்கெட்டில் இருந்து ஜெற் விமானம் தனியாக பிரிந்து பறந்து சென்றது.



இது போன்ற சோதனை நடந்தது இது 3-ஆவது தடவை. 2001-ஆம் ஆண்டில் நடந்த முதல் சோதனை வெற்றிபெறவில்லை. கடந்த மார்ச்மாதம் நடந்த 2-ஆவது டெஸ்ட் ஓரளவு வெற்றி பெற்றது. இப்போது நடந்த 3 ஆவது சோதனை முழு வெற்றி பெற்றது. ஒலியை விட 10 மடங்கு வேகத்தில் பறக்கும் ஆற் றல் உள்ளது. 'ஸ்காரம் ஜெற்' என்று இந்த அதிவேகஜெற் விமானத்துக்கு பெயரிட்டுள்ளனர்.

## புதிய செல்போன்கள் ஜப்பானால் அறிமுகம்


ஜப்பானின் என்.டி.டி. டோக்கோமோ நிறுவனம் புதிய செல்போன்களை தயாரித்துள்ளது. இந்தப் புதிய ரக செல்போனில் உள்ள எல்.சி.டி. டிஸ்பிளேயில் வீடியோ கேம்ஸ், 3ஈ இமேஜ், ஒலி, ஸ்டீரியோ ஸ்பீக்கர் போன்றவை உள்ளன.

டோக்கியோ நகரில் நடந்த அறிமுகவிழாவில் இந்த புதியசெல்போன்களுடன் மாடல் அழகிகள்போஸ் கொடுத்துள்ளனர். இந்த மாத இறுதியில் இந்தப் புதிய செல்போன்கள் அங்கு விற்பனைக்கு வருகின்றன.

## ஒரு கோடி ரூபா செலவில் டொல்பினுக்கு செயற்கைவால்

ஜப்பானின் "ஒக்கினவா" பகுதியில் உள்ள கடல்வாழ் உயிரின பூங்காவில் உள்ள ஒரு டொல்பின் மீனுக்கு கடந்த சில நாட்களுக்கு முன்பு நோய் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து அந்த டொல்பினுக்கு சிகிச்சை அளித்த டொக்டர்கள் அதன் வால் பகுதியை அறுவை சிகிச்சை மூலம் அகற்றினார்கள், ஆபரேஷனுக்கு பிறகு வால் இழந்த அந்த டொல்பின் மீன் நீந்த முடியாமல் தவித்தது.

250 கிலோ எடையுள்ள அந்த டொல்பின் மீன் நீந்த முடியாமல் ஒரே இடத்தில் முடங்கிக் கிடந்தது. அங்குள்ள ஒரு டயர் தயாரிப்பு நிறுவனத்தினர் பைபர் இழைகளால் ஆன செயற்கை வாலை தயாரித்தனர். அந்த செயற்கை வாலை தயாரித்து அந்த செயற்கை வாலைப் டொல்பின் மீனுக்கு பொருத்தினார்கள். செயற்கை வாலை



பயன்படுத்தி நீந்த அந்த டொல்பினுக்கு பயிற்சியும் கொடுக்கப்பட்டது. இப்போது அந்த டொல்பின் மீன் மற்றமீன்களைப் போல நீந்துகிறது. அந்த செயற்கை வாலைத் தயாரிக்க இலங்கை நாணயப்படி ஒரு கோடிரூபா அந்த நிறுவனத்திற்கு செலவாகியுள்ளது.

## பற்சொத்தை உண்டாவது எப்படி?

சிலருடைய உமிழ்நீரில் அமிலத்தன்மை அதிகமிருக்கும். இவற்றுடன் பற்பல ஊக்கி நீர்களும் சேர்ந்து கொண்டு பல்சொத்தை உண்டாக்கும் சாத்திக் கூறுகள் உள்ளன.


உமிழ்நீர் சுரக்கும் அளவு குறைந்தாலோ அல்லது மாறு பட்டாலோ பற்களில் சொத்தை உண்டாகும். லாக்டொ பெசில் பக்ரீரியாவின் வளர்ச்சியைத் தடை செய்யும் ஆற்றல் உமிழ் நீரில் இருக்கிறது. இந்த திறன் குறைந்தால் கிருமிகள் எச்சங்களைத் தாக்க ஆரம்பித்து விடும். பல்சொத்தை உண்டாவதற்கான வாய்ப்பு இருந் தால் வாயில் சுரக்கும் உமிழ் நீரில் சுண்ணாம்புச் சத்தும், பாஸ்பரஸ் சத்தும் குறைவாக இருக்கும். இதைப் போலவே விற்றமின் 'ஏ' சத்தும், 'டி' சத்தும் குறைந்துவிடும்.

இதுதவிர சிலருக்கு பரம்பரையாகவும் சொத்தை வரவாய்ப்பு இருக்கிறது. இந்தியா வில் 60 சதவீதம் பேர் பற்களை ஒழுங்காக பராமரிப்பதில்லை. இதனால் தான் பல்சொத்தை மற்றும்பற் சிதைவு உள்ளிட்ட நோய்களின் பாதிப்பும் அதிகமாக உள்ளது.

# தமிழீழ மாவீரர் நாள்

இந்த மாவீரர்கள் யார்? இவர்கள் எப்படிப்பட்டவர்கள், இவர்கள் ஏன் மாவீரரானார்கள், இவர்கள் மாவீரராகிய கோலங்கள், குறிகள் எப்படியானவை, இவர்களை இழக்கின்ற போது இவர்களது பெற்றோர், சகோதரங்கள், மனைவி, கணவன், பிள்ளைகளின், தாற்பரியம் எப்படியானது இவை யாவையும் விரிவாக, விளக்கமாக எழுதப்புகின் பெரிய நீண்ட தொடராகிவிடும். தவிர்ந்து எனது சிறிய அனுபவத்திற்குத் தக்க வகையில் சுருக்கமாகத்தர விளை கிறேன்.

சிறிலங்காப் பேரினவாத அரசினாலும், அரசபடைகளாலும் தமிழீழ மண் பறிக்கப்பட்டு, மக்கள் அழிக்கப்பட்டுத் துரத்தப்பட்டு, அல்லோலகல்லோலப்பட்ட வேளையில் எமது தேசியத் தலைவர் மேதகு.வே. பிரபாகரன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்தில்



போராளியாக இணைந்து எமது போராட்டத்திற்கு எதிரான அனைத்து எதிரிகளுடனும் போராடி தங்களை அர்ப்பணித்துத் தற்கொடையாக வீரச்சாவைத் தழுவிக் கொண்ட போராளிகளையே தமிழீழ மக்கள் மாவீரர்கள் என்ற நாமத்துடன் ஏற்றிப் போற்றிப் பூசித்து வருகின்றனர்.

இவர்கள் குடும்பத்தை அதிகமாக நேசித்து, இந் நேசம்,பாசம் யாவும் விரிவடைந்து தமிழீழ மக்களையும், மண்ணைம் நேசித்த காரணத்தால் போராட்டத்தில் இணைந்தார்கள். அந்தக்கணத்தில் தன்னையும், தன் உடல், உதிரம், ஆன்மா, தன் வளமான வாழ்வு அத்தனையையும் அர்ப்பணிப்போம் என்ற உறுதி எடுத்துப் போராடினார்கள்.இவர்கள் போராடி மாவீரராகும் பொழுது தங்கள் இலட்சியத்தை மக்கள் ஏற்றுப் போராடித் தமிழீழத்தை மீட்பார்கள் என்ற நம்பிக்கையில் மாவீரராகுவதற்குத் தயங்குவதில்லை. தாங்கள் போராட்டத்தின் அத்திவாரங்கள், வேர்கள், விழுதுகள் என்ற நம்பிக்கையினால் மாவீரரானார்கள். எமது உயிரினும் மேலானது சுதந்திரம், எமது மக்கள் கௌரவம், சுபீட்சமானவாழ்வு என்ற தலைவரின் இலட்சிய வேட்கையைக் கைக்கொண்டு மாவீரரானார்கள்.மாவீரர்கள் என்னும் பொழுது அனைத்து வீரச்சாவடைந்த வர்களையும் பொதுமையாகக் குறிப்பிட்டு நோக்கினாலும் எமது போராளிகளுடைய வீரச்சாவுக் கோலங்கள் மாறுபட்டவையாகவும், வேறுபட்டவையாகவும், வித்தியாசமாகவும் அமைவதை வரலாறுகள் மூலமாக சம்பவங்கள் மூலமாக அறியக் கூடியதாக உள்ளது.

போராளிகள் எதிரியை எதிர்த்து, முகாம்களைத்தகர்க்க, இடங்களைப்பிடிக்கப் படையணிகளாகச் சென்று வீரச்சாவடைகின்றார்கள். விழுப்புண்ணடைந்து பின் வீரச்சாவடைகின்றார்கள். முகாம்களை, கப்பல்களை, டோறாக்களை, பாரிய எதிரிகளை, படையணிகளைத் தங்கள் உடல்களில் குண்டேந்தி, தாக்கித் தகர்த்துத் தங்களையே சிதறடித்துத் தற்கொடையாளர்களா கின்றனர். இவர்களைக் கரும்புலிகள் என்கின்றோம். இவை தரையிலும், கடலிலும் நடக்கின்றன. இவர்களில் முகம் தெரியாத விலாசமில்லாத கரும்புலி மாவீரர்களும் இல்லாமலில்லை. அனைத்துத் தியாகங்களிலும் இது உயர்வாக மக்களால் மதித்துப் போற்றப்படுகின்றது. இவர்களுடைய வித்துடல் கிடைக்காத காரணத்தால் நினைவுக்கல் நாட்டப்பட்டு, வீட்டுக்குத் திருவுருவப்படங்கள் கொடுக்கப்படுகின்றன.

எதிரியின் சுற்றிவளைப்பு தற்செயலான அகப்பாடுகள் மூலம் எதிரியிடம் பிடிபடாமல் தம்மைத்தாமே எரித்துத் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்வதும் ஒரு வகை வீரச்சாவாகும். இதற்கு முக்கிய உதாரணமாக வங்கக்கடலில் காவியமான கேணல் கிட்டு அவர்களையும், தோழர்களையும் கூறலாம். சைனட் கடித்தும் தம்மை அழித்துள்ளனர்.

அகிம்சை முறையில் வீரச்சாவு இது அகில உலகமும் அறிந்த ஒரு அதி உயர் தியாகச்சாவு எமது தமிழீழத்தில் தியாகி லெப்.கேணல் திலீபன் இதை வரலாற்றில் பதித்தான். இவனின் பாதச்சுவட்டை அடியொற்றி தியாகச்சுடர் அன்னை பூபதியம்மா தன்னை அர்ப்பணித்து நாட்டுப்பற்றாளரானார்.

இன்னும் விபத்துச்சாவுகளும், சுகயீனச் சாவுகளுமாக பல கோலங்களில் வீரச்சாவுகள் நடைபெற்று வருகின்றன. இவர்கள் இழப்புக்களை உறவுகள் எப்படியும் தாங்கிக்கொள்வது மிகவும் கடினமே. ஆரம்பகாலத்தில் பெற்றோரும், சகோதரர்களும் மட்டுமே இழப்புக்களைச் சந்தித்தனர். இன்றைய காலகட்டத்தில் கணவனை, மனைவியை, தாயைப் பிள்ளைகளும் இழக்கும் வகையில் போராட்டம் விரிவடைந்து வருகின்றது. இவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட மாவீரர்களை இழக்கும் குடும்பங்களையும், ஒரே நேரத்தில் இரு மாவீரர்களை இழக்கும் குடும்பங்களையும் கூடச்சந்திக்கின்றோம். இவர்களுடைய துன்ப துயரங்கள் கவலைகள் வேறு பட்டவையாகும். இறுதி நிகழ்வு நேரங்களில் அணுகுமுறைகள் மாறுபட்டவையாகவும் காணப்படும். இவையாவையும் எமது போராளிகள் சமாளித்து அரவணைத்து, ஆறுதல் கூறிக் கௌரவமாகவும், புனிதமாகவும் எமது போராளிகள் நிறைவேற்றி வருகின்றார்கள்.

இம்மாவீரர்கட்குப் பிரதேசவாரியாக ஆவணங்கள் போன்று புனிதமாகத் துயிலுமில்லங்கள் அமைக்கப்பட்டு மாவீரர் பெற்றோரின் விருப்பத்திற்கமைவாக வித்துடல் விதைக்கப்பட்டும், நடுகற்கள் நாட்டப்பட்டும் வருகிறது.

இம்மாவீரர்களின் விசேட நிலைகளைக் கருத்தில் கொண்டு அவர்களுடைய முதன்மையான வீரச்சாவுகளை, அதே தினங்களில் புனிதமாக நினைவு கூர்ந்து வருகிறார்கள். இவற்றில் சில தேசிய தினங்களாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாகக் கூறப்புகின் கேணல் கிட்டுவும் தோழர்களும் நினைவு நாள் அன்னை பூபதியம்மா நினைவு நாள், கரும்புலிகள் நினைவு நாள், தியாகி திலீபன் நினைவு நாள், பன்னிருவர் நினைவு நாள், 2ஆம் லெப் மாலதி நினைவு நாள் மாவீரர்நாள் என்பன பிரதானமானவையாகும்.

அனைத்து மாவீரர்களையும், தமிழீழ மக்கள் நினைவு கூரவும் மாவீரர் பெற்றோரைக் கௌரவிப்பதற்காகவும், முதல் மாவீரர் லெப் சங்கர் வீரச்சாவடைந்த நவம்பர் 27 ஆம் திகதியை 1989 முதலாக, மாவீரர் நாளாக எமது தேசியத்தலைவர் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டு ஆண்டு தோறும் மாவீரர் நாள் நடைபெற்று வருகிறது.

இந்நாட்களில் தமிழீழம் புனிதமாக விழாக்கோலம் பூண்டு காணப்படும். நவம்பர் 27ஆம் திகதி மாலை 6,05 மணிக்கு அனைத்து மாவீரர் பெற்றோர்களும் தங்கள் தங்கள் துயிலுமில்லங்கட்குச் சென்று தங்கள் மாவீரச் செல்வங்களின் விதைகுழிகட்கும், கல்லறைகட்கும் சென்று சுடரேற்றுவார்கள். இதற்கு முன்பாக எமது தேசியத் தலைவர் அவர்கள் நாட்டு மக்களுக்காற்றும் உரை இடம்பெறும். பின் அமைப்பின் கௌரவிப்பைத் பெற்றுப் பெற்றோர் விடை பெறுவர்.

தமிழீழ மக்கள் இக்காலகட்டத்தில்



மாவீரர்களைக் காவல் தெய்வங்களாகவும், மீட்பர்களாகவும் நினைத்து ஏற்றிப் போற்றி, சுடரேற்றி மாலையிட்டு, மலர்தூவி வீர வணக்கம் செலுத்தி வருகிறார்கள்.

மாவீரர் பணியில்
பொன்.தியாகம்

## இந்.மீனவரின் அத்துமீறலைக்கட்டுப்படுத்த மன்னாரில் 9 பேர் கொண்ட குழு அமைப்பு

(மன்னார்)

மன்னார் கடற்பிரதேசத்தில் அத்துமீறி வருகின்ற இந்திய மீனவர்களின் படகுகளைத் தடுப்பது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று நேற்று முன்தினம் அங்குராார்ப்பணம் செய்து வைக்கப் பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட மீனவர் சங்கங்களின் சமாசத்தலைமையகத்தில் அதன் தலைவர் சூசையப்பு துரம் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் இந்த ஒன்பது உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தற்போது கடற்படையினரின் தீவிர ரோந்து நடவடிக்கையால் இந்திய மீனவர்களின் படகுகள் மன்னார் கடற்பரப்புக்குள் வருவது நிறுத்தப்பட்டுள்ளது. இந்த நிலை தொடர்ந்தும் நீடிக்க வேண்டும் என்றும் இந்த மீனவர்கள் எமது பகுதிக்குள் வராது தடுக்க கடற்படையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கடற்படை அதிகாரிகளிடம் மகஜர் மூலம் கோரிக்கை விடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்து பேசாலையில் அண்மையில் மன்னார் பகுதி மீனவர்கள் மேற்கொண்ட போராட்டத்தையடுத்து கடற்படையினர் இந்திய மீனவர்கள் வருவதை தடுத்து வருகின்றனர். எனினும் எதிர் காலத்தில் மீண்டும் இந்திய மீனவர்கள் அத்துமீறி வந்தால் அது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காகவே இந்த ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## அவசர சந்திப்பு

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகவும், தொண்டர் ஆசிரியர்களாக இருந்து ஆங்கிலம கற்பிக்கும் ஆசிரியர்களுக்குமான அவசர சந்திப்பு இன்று சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையில் நடைபெறும். அனை வரும் சமுகம் தருவதுடன் தங்களது க.பொ.த.(சா.த) க.பொ.த.(உ.த) பரீட்சைப பெறுபேறுகளின் பிரதியையும் கொண்டு வருமாறு கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## நெடுங்கேணி பிரதேச மாவீரர்களின் பெற்றோர் 23 இல் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

நெடுங்கேணி பிரதேச அரசியல துறையினரால் அப்பகுதி மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக் கப்படவுள்ளனர்.

எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நெடுங் கேணி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நெடுங்கேணி பிரதேசத்திற்குட்பட்ட 200இற்கும் மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிப்பதற்கு நெடுங்கேணி பிரதேச அரசியல் துறையினர் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். (ச.கு)

## மன்னார் மாவட்டத்திற்கு 80 இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் வன்னி பாராளுமன்ற உறுப்பினர்கள் 06 பேரும் இணைந்து 98 அபிவிருத்தித் திட்டங்களுக்கு 80 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளனர்.

இதேவேளை வன்னித் தேர்தல் தொகுதியில் மொத்தமாக 06 மாவட்டங்களுக்கு 2 கோடியே 20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மன்னாரில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 80 இலட்சம் ரூபாவும், முன்பள்ளிகள் திருத்தம், பொதுநோக்கு மண்டபம், மக்களின் மீள் குடியமர்வு, வைத்தியசாலைகள், வீதியை அபிவிருத்திசெய்தல் போன்றவற்றிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. (மி)



வன்னேரிக்குளத்திற்கும் ஜெயபுரத்திற்குமிடையிலுள்ள ஐந்து கண் மதகு பாலம் திருத்த வேலை அரைகுறையாக நிற்பதால் வெள்ளம் வீதிக்கு மேலால் பாய்வதையும் பயணிகள் மோட்டார் சைக்கிளை காவிச் சென்று அக்கரைக்கு ஏற்றுவதையும் படத்தில் காணலாம்.(படம்.05)

# கருணாவின் அரசியல் ஆசை தோல்விபடைந்தது; இந்திய கேணல் ஹரிகரனின் ஆய்வறிக்கை தெரிவிப்பு!

சிறிலங்கா சம்பந்தப்பட்ட விவகாரங்களில் அக்கறையுள்ளோரால் பெரிதாக எதிர்பார்க்கப்பட்ட விடயமான கருணாவின் அரசியற் பிரவேசம் என்பது தோல்வியைத் தழுவி வருவதாக இந்திய அமைதிப் படையின் புலனாய்வு நடவடிக்கைகளிற்கான தலைமை யதிகாரியாக இருந்த கேணல் ஹரிகரன் தெரிவித் துள்ளார்.

ஆசியாவின் பிரபல்யமான ஆய்வுமையமொன்றிற் கான தனது ஆய்வறிக்கையில் மேற்படி கருத்தை வலியுறுத்தி பல ஆதாரச் சான்றுகளைத் தெரிவித் துள்ள கேணல் ஆர். ஹரிகரன் கருணா புதுக்கட்சி தொடங்குவதற்கான சான்றுகள் அரிதாகவே தெரிகின்றன.. கருணா ஈ.பி.டி.பியுடன் இணைந்தே செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்திருப் பதைக் காணக்கூடியதாகவும் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி தற்போதே இராணுவத்துடன் சேர்ந்து வட-கிழக்கில் இயங்கும் ஒரு ஆயுதக்குழுவென்றும், இவ்வாறான ஆயுதக்குழுக்களிற்கு ஏற்படும் மரணங்கள் 'இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஒருவர் கொல்லப்பட்டார்' என அல்லது

இராணுவத்தின் முகவர் (ஏஜன்ட்) கொல் லப்பட்டார்' என்றுமே இலங்கையில் நோக்கப்படுகிறது கருணாவினை ஆதரிப்போர் மரணங்களும் மேற் கண்டவாறே நோக்கப்படும்.

கிழக்கிலும் கல்முனை வரையான கரையோரங்களையும், உள்நிலங்களையும் விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர், தொப்பிக்கல மற்றும் அரலங்கன்வில்ல - மகா ஓயா பகுதிகளிலிருந்தே கருணாவிற்கு ஆதரவானோர் செயற்படுகின்றனர். இவ்வாறான நிலையில் கருணா புதுக்கட்சி தொடங்குவது பற்றியும் அரசியலிற்குள் பிரவேசிப்பது பற்றியும் வெளிவந்துள்ள செய்திகள் கருணா தோல்வியைத் தழுவி வருவதையே காட்டுகிறது.

கருணா அரசியலிற்குள் பிரவேசிக்கும் தகுதிக ளையோ வசீகரத்தையோ கொண்டிருக்க வில்லை கருணா விடுதலைப்புலிகளிடமிருந்து பிரிவதற்காகக் கையாண்ட விடயங்கள் மக்கள் மத்தியில் விலை போகும் விடயங்களல்ல.

பிரதேசவாதத்தை ஏற்படுத்துவது மற்றும் விடு தலைப் புலிகளின் தலைவரைப் பற்றிய அவதூற்றுப் பிரச்சாரத்தை மேற்கொள்வது என்று கருணா கையாண்ட இரண்டு விடயங்களும் மக்களிடம் செல்லு படியாகாத, கருணாவிற்கு பாதகமான விடயங்களாக அமைந்துள்ளன என்றும் தெரிவித்துள்ளார். முன்னைநாள் புலனாய்வுத்துறைத் தலைவரான கேணல். ஆர். ஹரிகரன், விடுதலைப்புலிகளே தமிழர் களின் விடுதலைப் போராட்டத்தை ஒருங்கிணைத்து அதனை உலகமயப்படுத்தினார்கள் என்பதே யதார்த்தமாக இருக்கிறது என்றும்,பிரபாகரனின் சார்பாக அன்ரன் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் போன்றோர் நாடுகளின் தலைவர்களையும் சர்வதேச இராஜதந்திரிகளையும் சந்தித்து உறவுகளை வலுப் படுத்தியுள்ளது போன்ற நிலையை இதற்கான உதார ணமாகக் குறிப்பிட்டுள்ள அவர், 'இவ்வளவு நாளும் நடைபெற்றது விடுதலைப் போராட்டமேயல்ல' எனக் கருணா கூறுவதும், பிரபாகரனிடமிருந்து தமிழ் மக்களை விடுவிக்கவே போராடப்போவதாக' கருணா கூறுவதும் தமிழ் மக்களிடம் செல்லுபடியாகாது எனவும் தெரிவித்துள்ளார், கிழக்கு மக்களே கருணாவை தங்களின் போராளியாகப் பார்க்காது, பயத்துடனும் கிலியுடனும் தற்போது பார்ப்பதே இதற்கு உதாரணமாகும் என்றார்.

அத்தோடு ஆயுதங்களை நம்பி இருப்பது மட்டுமே கருணா வுக்கு உள்ள தெரிவு என்றும் அவர் அதைவிடுத்து அரசியல்வாதியாக மாறி மக்களின் ஆதரவை பெறுவது நடைமுறைச்சாத்திய மற்றது என்றும் தெரிவித் துள்ளதோடு பிரதேசவாதத்தை வைத்து கிழக்கில் தனது அரசியலாசையை கருணா வளர்க்க முயன்றால் அதனை ஆயுதபாணிகளாக இருந்து கொண்டே செய்யலாம் எனவும் இது கருணா வின் ஆசையை இரட்டிப்புச் சிக்கலாக்கும் விடய மாகும் என்றார்.

கருணா அரசியல் தலைமையை அடைய முடியா ததற்கான காரணமாக தமிழர்களினது ஆதர வைப் பெறமுடியாமை மற்றும் சிறிலங்காவின் பெரும் பான்மை அரசியற்கட்சிகளினதும் ஒத்துழைப்பை அல்லது நேரடி ஆதரவை பெறமுடியாத நிலையைச் சுட்டிக்காட்டியுள்ளார். இந்நிலையிலேயே ஈ.என்.டி. எல்.எப் என்ற தமிழ்மக்களிடம் ஆதரவில்லாத ஒரு அமைப்பின் மூலமாகப் பிரவேசிக்க முயன்றதாகவும் தெரிவித்துள்ள அவர், அத்தோடு கிழக்கை எடுத்துக் கொண்டால் முஸ்லிம்களின் ஆதரவைப் பெறுவது கடினமான விடயம் என்றும் முஸ்லிம் கட்சிகளை எடுத்துக் கொண்டால் கூட, சமாதானப் பேச்சுக்களில் தங்களின் பங்கைப் பற்றிய அக்கறை கொண்டுள்ள இந்நேரத்தில் முஸ்லிம் கட்சிகள் எதுவும் கருணா விற்கான ஆதரவைத் தெரிவித்து புலிகளைப் பகைக்க மாட்டார்கள் என்றார்.

நிதிவளத்தைத் தொடர்ச்சியாகப் பெறுதல் மற்றும் அரசியற்கட்சிக் கான படிமுறைகளை வடிவமைக்கும் வல்லமை கருணாவிடம் இல்லை ஆயுதங்களைக் கைவிட முடியாத ஒருவராகவே கருணா இருக்க வேண்டிய நிலையை விடுதலைப்புலிகள் அவருக்கு ஏற்படுத்தியுள்ளனர். இந்நிலையில் கருணா தோல்வியையே நோக்கிச் செல்வதாகவும், கேணல் ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

# அடுத்த ஆண்டின் பாதுகாப்பு செலவினமாக 7602 கோடி 706 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் அடுத்த ஆண்டிற்கான செலவினமாக 07 ஆயிரத்து 602 கோடியே 706 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தரைப்படை, கடற்படை, விமா னப்படை மற்றும் பொலிஸ் சேவை உட்பட தேசிய பாதுகாப்பிற்கான மொத்த செலவினமாக மேற்படி தொகை நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு- செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

பொலிஸ் சேவை மற்றும் மக் கள் பாதுகாப்புத் தவிர்ந்த முப் படையினருக்கு மாத்திரம் 05 ஆயி ரத்து 630 கோடிரூபா ஒதுக்கப் பட்டுள்ளது. கடந்த ஆண்டு மொத்தப் பாதுகாப்பு செலவின மாக 6ஆயிரத்து 609 கோடியே 338 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட் டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அடுத்த ஆண்டிற் கான பொலிஸ் சேவை ஆணைக் குழுவின் மொத்த செலவினமாக ஐந்து கோடியே 50 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

# கொழும்பில் ஆறு மாதங்களில் 130 வாகனக் கொள்ளைகள்

## படையினர், பொலிசார் சம்பந்தம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் மாதமொன் றுக்கு சராசரியாக 20 வாகனங்கள் என்ற ரீதியில் கடந்த ஆறுமாதங் களில் 130இற்கும் மேற்பட்ட வாகனங்கள் கொள்ளையிடப்பட் டுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரி விக்கின்றன.

கொழும்பில் திடீரென அதிகரித் துவரும் இந்த வாகனக் கொள்ளை யால் நகரில் வாடகைக்கு கார் களை விடும் நிறுவனங்கள் பல மூடப்படும் அபாய நிலைமையும் உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

தற்போது அதிகரித்து வரும் இந்த வாகனக் கடத்தலால் வாக னச் சாரதிகள் பலரும் வாகனச் சொந்தக்காரர்களும் கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் குறித்தும் அச்சம் தெரிவிக்கப்பட் டுள்ளது.

வாடகைக்கு காரை வழங்கும் நிறுவனம் ஒன்று மட்டும் கடந்த ஆறு மாத காலத்தில் 15 கார்களை இழந்துள்ளது. மற்றொரு நிறு வனம் 10 கார்களை இழந்துள் ளது. போலி முகவரிகள் மற்றும் போலி அடையாள அட்டைகளுடன் வரும் சாரதிகளே இவற்றில் பெரு மளவு கார் கொள்ளைக்குக் காரண மென நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தக் கொள்ளைகளால் தாங்கள் நிறுவனங்களை மூடவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். தொடர்ந்தும் பலத்த நஷ்டத்தைச் சந்திக்கத் தாங்கள் தயாரில்லை யெனவும் கூறியுள்ளனர்.

இங்கு கொழும்பு நகரில் வீதி களில் நிறுத்தப்படும் வாகனங் களும் பல கொள்ளையிடப்பட் டுள்ளன. பல்வேறு முன்னெச் சரிக்கை நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அத னையும் மீறி வாகனக் கொள் ளைகள் நடைபெறுவது குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல வாகனக் கடத்தல்களும் கொள்ளைகளும் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்ட போதிலும் பெருமளவு வாகனக் கடத்தல் களிலும் கொள்ளைகளிலும் பொலிசாருக்கும் படையினருக் கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும் குற்றம்சாட்டப்பட் டுள்ளது. கொழும்பிற்கு வெளியே யும் வேறு மாவட்டங்களிலும் வாகனக் கொள்ளைகள் நடைபெற் றாலும் கொழும்பு நகரினுள்ளேயே இவை பெருமளவில் அதிகரித் துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

-2006 ஆம் ஆண்டிற்குள்-

# பொலித்தீன் பாவனையை முற்றாக நிறுத்த முடிவு

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டிற்குள் இலங்கை முழுவதிலும் பொலித்தீன் பாவனைகள் முற்றாக நிறுத்தப்படுமென இயற்கை வளப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது .

பொலித்தீன் உற்பத்தி நிறுவனங்களின் உரிமையாளர்களையும். பொலித்தீன் இறக்குமதியாளர்களையும் வரவழைத்து பேச்சு வார்த்தைகள் நடத்தப் போவதாக அமைச்சர் பௌசி தெரிவித்துள்ளார்.


## போரினால் பாதிக்கப்பட்ட புனரமைப்புத்திட்டம்
## கேள்வி அறிவித்தல் - இல.32.

மேற்படி விடயம் தொடர்பான கேள்வி அறிவித்தல் தவறுதலாக 17.11.2004ம் திகதி இப் பத்திரிகையில் மீள் பிரசுரமாகியுள்ளது என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

திட்டமுகாமைத்துவப்பிரிவு,
நிகொட்,
திருகோணமலை.

(சி-10766)



## வாடகைக்கார் உரிமையாளர் கழகம் வன்னி
## உரிமையாளர் பார்வைக்கு

31. 12. 2003 ஆம் ஆண்டுக்கு முன் வழியனுமதிப்பத்திரம் பெற்று ஊர்தியை பணியில் ஈடுபடுத்தாது தொடர்ந்து எமது கழகத்தில் உறுப்புரிமையை பேணி வருவோர் வரும் 15. 12. 2004ஆம் நாளுக்குமுன் எமது கழகத்துடன் தொடர்பு கொண்டு வழியனுமதிப் பத்திரத்தை மீளப்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு:- மேற்படி வீடயம் தொடர்பாக தலைவரைச்சந்திக் கும் நாட்கள்

03.12.2004 } 10.00 - 02.00 மணி வரை
10.12.2004 }

இறுதி நாள் 15.12.2004

தே.ரூபன்
தலைவர்

(5059)



## கேள்வி அறிவித்தல்

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் அனுசரணையுடனான ஜி ரி சற் (GTZ) புதிய உணவு உதவித்திட்டம் பின்வரும் உணவுப் பொருட்களை வழங்குவதற்கு அனுபவமுள்ள பிரபல வர்த்தக நிறுவனங்களை அழைக்கின்றது.

| | | |
|---|---|---|
| அ. | புழுங்கல் சிவப்பு நாட்டு அரிசி/ தீட்டல் பச்சையரிசி. | - 100 மெற்றிக்தொன் |
| ஆ. | கோதுமை மா - | 100 மெற்றிக்தொன் |
| இ. | பருப்பு - | 25 மெற்றிக்தொன் |
| ஈ. | சீனி(வெள்ளை)- | 92 மெற்றிக்தொன் |
| உ. | கௌப்பி - | 50 மெற்றிக்தொன் |
| ஊ. | பயறு - | 25 மெற்றிக்தொன் |

இப்பொருட்கள் மொத்தமாக 2004 டிசம்பர் 15ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் யாழ்ப்பாணத்திற்கு வழங்கப்படல் வேண்டும்.

விபரமான விதிகள் நிபந்தனைகள் அடங்கிய கேள்வி ஆவணங்கள் 2004 நவம்பர் 22, 23ஆம் திகதிகளில் முற்பகல் 9.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணி வரை இல: 06 ஜாவத்த வீதி, கொழும்பு-5இல் உள்ள ஜி ரி சற் (GTZ) அலுவ லகத்தின் கொள்வனவுப் பிரிவில் அல்லது இல: 472,பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள GTZ-NRP அலுவலகத்தில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ரூபா 3000/= செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்களைப் பெறுவதற்கு தலைமை நிர்வாகி, GTZ, இல: 06, ஜாவத்தவீதி, கொழும்பு-5 என விலாச மிடப்பட்ட ஒரு கடிதத்தின் மூலப்பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

2004 நவம்பர் 29ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு முன்பாக கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

திட்ட முகாமையாளர்,
புதிய உணவு உதவித்திட்டம்.

(சி.10624)

# இந்திய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில சக்திகள் கடமை உணர்வோடு இல்லை

## - இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

(புதுடில்லி)

**"பிரதமரின் செயற்பாட்டைப் பாராட்டுகிறோம். ஆனால் ஆட்சியில் உள்ள சில சக்திகள் கடமைஉணர்வோடு இல்லை" என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி குற்றம் சாட்டியிருக்கிறது. இதுகுறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சீதாராம் எச்சூரி கூறியதாவது;**

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் குறைந்தபட்ச செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம். பிரதமர் மன்மோகன்சிங் சிறப்பாக செயற்பட்டு வருகிறார். ஆனால் ஆட்சியில் இருக்கும் சில சக்திகள் தங்கள் கடமையை மறந்து விடுகிறார்கள். அவர்கள் சிறப்பாகச் செயற்படவில்லை. பிரதமரைப் போல அவர்களும் செயற்படவேண்டும். குறைந்தபட்ச செயற்றிட்டத்தில் இடதுசாரிக் கட்சிகளின் கொள்கைத் திட்டங்களும் இடம்பெற்றுள்ளன. குறைந்தபட்ச செயற்றிட்டத்தைத் தொடர்ந்து சிறப்பாகச் செயற்படுத்த வற்புறுத்துவோம்.

இந்த அரசு குறைந்தபட்ச செயற்றிட்டத்தைச் சிறப்பாக செயற்படுத்தவில்லை என்று நான் கூறுவதால், அரசுக்கு ஆதரவை வாபஸ் பெறுவோம் என்று அர்த்தம் அல்ல.

ஆதரவை வாபஸ் பெறுவது எங்கள் நோக்கம் அல்ல. சிறப்பாக அரசு செயற்படவேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை. சிறப்பாக செயற்படுவதைப் பொறுத்து எங்கள் ஆதரவு அவர் களுக்குத் தொடர்ந்து கிடைக்கும்.

குறைந்தபட்ச செயற்றிட்டத்தில் இலலாததைச் செயற்படுத்துங்கள் என்று நாங்கள் கூறவில்லை. அதை விரைவாக செயற்படுத்துங்கள் என்றுதான் கூறுகிறோம்.

வேலை உத்தரவாதத் திட்டம், லோக்பால் பிரேரணை, தனி உரிமை பிரேரணை ஆகியவற்றை நிறைவேற்றவேண்டும். இவற்றை நிறைவேற்றுவதில், இந்த அரசுக்கு எதிர்ப்பு இருக்கிறது என்பதையும் நாங்கள் உணருகிறோம். பாராளுமன்றத்தின் கடந்த 2 கூட்டத்தொடர்களும், எதிர்க்கட்சியின் நடவடிக்கைகளால் பயன் இல்லாமல் போய்விட்டன.

குறைந்தபட்ச செயற்றிட்டத்தில் இடம்பெற்றுள்ளவை பற்றி எங்களுடன் அரசு ஆலோசனை நடத்தத் தேவையில்லை. அவற்றை விரைவாக செயற்படுத்தினாலேபோதும்.

குறைந்தபட்ச செயற்றிட்டத்தில் இடம்பெறாத திட்டங்களை நிறைவேற்றும் முன் எங்களுடன் ஆலோசனை நடத்தினால் மகிழ்ச்சி அடைவோம் என்றும் கூறினார்.

## அந்தமானில் நிலநடுக்கம்

(புதுடில்லி)

அந்தமான் கடற் பகுதியில் நேற்றுமுன்தினம் லேசான நில நடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில இது 5.1 எனப் பதிவாகி இருந்தது. இத்தகவலை இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இரண்டு நாள் விஜயம் மேற்( )ாண்டு இந்தியா வந்துள்ள உலகவங்கிப் பிரதிநிதி ஜேம்ஸ் டி ்வோல்பன் சோனுடன் பேச்சு நடத்தும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.

# தொழில் மேம்பாட்டிற்கு இந்தியா உதவ இணக்கம்

(புதுடில்லி)

பல்கேரிய நாட்டு வேளாண் அமைச்சர் மெகத்திக்மி இந்திய மத்திய சிறு தொழில் அமைச்சர் மகாவீர் பிரசாத்தை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார்.

இச் சந்திப்பில் பல்கேரிய நாட்டில் சிறு தொழில்களை மேம்படுத்த தொழில் நுட்ப ரீதியான உதவிகளை இந்தியா அளிக்கும் என அமைச்சர் பிரசாத் உறுதி கூறினார். மேலும், இந்தியாவும், பல்கோரியாவும் சிறு தொழில் மற்றும் ஊரக தொழிற்றுறைகளில் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக மேம்பாட்டை பகிர்ந்து கொள்வது குறித்தும் இந்தச் சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டது.

சிறு தொழில்களை தொடக்க முன்வருவோருக்கு பயிற்சி, தொழில்நுட்பம் அளிப்பது இந் நாட்டு வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் அவர்கள் ஆலோசித்தனர்.

# தமிழக காவல்துறையின் விசாரணைக்கு மடாதிபதி ஜெயேந்திரர் மறுப்பு

## -நீதிமன்றில் கடும் வாக்குவாதம்

காஞ்சிபுரம் நீதிமன்றத்தில் சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டார். கோவில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கில் கடந்த 11 ஆம் திகதி ஆந்திர மாநிலம் மெபூப் நகரில் தமிழக பொலிசார் அவரைக் கைது செய்தனர். அன்று இரவு காஞ்சிபுரம் மாஜிஸ்திரேட் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார். நீதிபதி உத்தமராஜ் விசாரித்து ஜெயேந்திரரை 15 நாள் காவலில் வைக்க உத்தரவிட்டார். அதைத் தொடர்ந்து ஜெயேந்திரரை வேலூர் சிறையில் அடைத்தனர்.

இதற்கிடையே பொலிஸ் விசாரணை கேட்டு கடந்த சனிக்கிழமை நீதிமன்றில் பொலிஸ் தரப்பில் கூடுதல் எஸ்.பி. சக்திவேல மனுத் தாக்கல் செய்தார். இந்த மனுவின் மீது நேற்று முன்தினம் விசாரணை நடந்தது. அப்போது நீதிமன்றில் ஆஜரான ஜெயேந்திரரிடம் நீதிபதி உத்தமராஜ் உங்களை பொலிஸ் காவலில் எடுத்து விசாரிக்க வேண்டும் என்கிறார்கள் உங்களது கருத்து என்ன? என்றார்.

நீதியை நம்புகிறேன். நீதிமன்றத்தை மதிக்கிறேன். உங்கள் பேனாவை நம்புகிறேன். ஆனால் பொலிசை நம்பவில்லை. பொலிஸ் விசாரணையில் எனக்கு நம்பிக்கை இல்லை. நேர்மையாகவும், நியாயமாகவும் விசாரணை நடத்த மாட்டார்கள். இந்த வழக்கில் பொலிஸ் பொய்யான தகவலையே அளித்து வருகிறார்கள். அவர்கள் விசாரணை நடத்த வேண்டும் என்றால் சிறையிலேயே விசாரிக்கலாம்.

சங்கரராமன் கொலை வழக்கில் பொலிசார் என்னை வேண்டும் என்றே சிக்க வைத்துள்ளனர். மெகபூப் நகரில் என்னைக் கைது செய்தபோது மடத்திற்கு அழைத்துச் செல்வதாகக் கூறிவிட்டு நீதிமன்றில் ஆஜர் செய்தனர். பொலிஸ் மீது எனக்கு நம்பிக்கை கிடையாது பொலிஸ் விசாரணைக்கு நீதிமன்றம் அனுமதி அளிக்கக் கூடாது. பொலிஸ் விசாரணையில் நியாயம் கிடையாது. என்று பதிலளித்தார்.

நீதிபதி: 5நாட்கள் விசாரணைக்காக பொலிசார் கேட்கிறார்கள்.

ஜெயேந்திரர்: பொலிஸ் விசாரணையே தேவையில்லை என்கிறபோது 5 நாள் என்ன? 3 நாட்கள் என்ன? வேண்டாம் என்று கூறும்போது எண்ணிடம் கருத்துக் கேட்பானேன்.



காஞ்சிபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்காக ஜெயேந்திரரை பொலிசார் வேலூர் சிறையிலிருந்து வெளியே அழைத்து வந்த காட்சி.

நீதிபதி: உங்கள் உடல் நிலை எப்படி உள்ளது. நன்றாக உள்ளதா?

ஜெயேந்திரர்: நன்றாக உள்ளது என்று சொல்ல முடியாது. சாமான்யமாக உள்ளது. இரத்தத்தில் சர்க்கரை அளவு 270 உள்ளது. 2 நாட்களுக்கு முன்பு காய்ச்சல் இருந்தது. மருத்துவர்கள் பரிசோதித்தார்கள்.

நீதிபதி: உங்களது உடல் நலம் குறித்து மருத்துவர்கள் அறிக்கை அளித்துள்ளனர். உங்களது உடலில் காயம் உள்ளதா?

ஜெயேந்திரர்:இதுவரை இல்லை.

இவ்வாறு நீதிபதி கேட்ட கேள்விகளுக்கு ஜெயேந்திரர் பதில் அளித்தார். பின்னர் இருதரப்பு விவாதம் நடந்தது.

# பா.ஜ.கட்சித் தலைமையிடம் உமாபாரதி மன்னிப்புக் கோரல்

(புதுடில்லி)

பாரதிய ஜனதாக்கட்சி தலைவா அத்வானிக்கு உமாபாரதி 2பக்க மன்னிப்புக் கடிதம் எழுதியுள்ளார். அதில் நீங்கள் என் தந்தை போன்றவர். உங்களை அவமதித்ததற்காக வருந்துகின்றேன். என்று கூறி இருக்கிறார். இதைத் தொடர்ந்து உமாபாரதி மீண்டும் பா.ஜ.வில் சேர்த்துக் கொள்ளப் படுவார் என்று தெரிகிறது.

மத்தியப் பிரதேச முதல்வர் பதவியை இராஜிநாமாச்செய்த உமாபாரதி பா.ஜ. பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து பேட்டி அளித்த அவர் அரசியல் புரோக்கர்களுடன் சேர்ந்து நான் பணியாற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. என்று மற்றொரு பா.ஜ. பொதுச் செயலாளர் பிரமோத் மகாஜனைத் தாக்கினார்.

அதைத் தொடர்ந்து பா.ஜ. புதிய நிர்வாகிகள் கூட்டம் அத்வானி தலைமையில் நடந்தது. அதில் வாஜ்பாய் வெங்கையா நாயுடு, உமாபாரதி மூத்த தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது பிரமோத் மகாஜன், அருண் ஜெட்லி, வெங்கையா நாயுடு போன்றவர்கள் மீது உமாபாரதி பகிரங்கமாக குற்றஞ் சாட்டினார். தன்னை விமர்சிக்கும் இந்தத் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்? என்று காரசாரமாகக் கேட்டார்.

அதற்குப் பதில் அளித்த அத்வானி அது முடிந்துபோன பிரச்சினை என்று கூறியதில் சமாதானம் அடையாத உமாபாரதி பாதியிலேயே கூட்டத்தை விட்டு வெளியேறி அத்வானி, வாஜ்பாய் போன்றவர்களை அவமதித்தார்.

அதைத் தொடர்ந்து பா.ஜ. அடிப்படை உறுப்பினர் பதவி, பொதுச செயலாளர் பதவி உட்பட அனைத்துப் பொறுப்புக்களில் இருந்தும் உமாபாரதியை 6 ஆண்டுகளுக்கு நீக்கி அத்வானி நடவடிக்கை எடுத்திருந்தார்.

## விசேட பாதுகாப்பு நடவடிக்கை

பீகார் மாநிலத்தில் உள்ள மத்திய சிறைகளில் இன்னும் ஒரு வாரத்தில் கண்காணிப்பு கமராக்கள் பொருத்துப்பட உள்ளது. பீகாா மாநிலத்தில் கடந்த சில மாதங்களாக பணத்துக்காக ஆட்கள் கடத்தல், கொலை, கொள்ளை ஆகியவை அதிகரித்துள்ளன.

இணையத்தளத்தில் புலிகளின் குரல்

14 ஆம் ஆண்டு நிறைவில் தமிழீழத் தேசியக்குரலான புலிகளின்குரல்

21.11.2004. முதல் இணையத்தளத்தில் புலிகளின் குரல் - - - -

(10767) www.pulikalin Kural.Com

## சாவு அறிவித்தல்



### திருநாவுக்கரசு இராசதுரை [நோட்டர்]

(T.R. காட்வெயர் சேல்சென்ரர் -சித்தன்கேணி)

சித்தன்கேணியை பிறப்பிடமாகவும் பன்னாலையைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு இராசதுரை (தர்மகர்த்தா, சங்கானை சிலம்புப் புளியடி வைரவர்ஆலயம்) 18.11.2004 அன்று காலமானார்.


அன்னார் திருநாவுக்கரசு-திருநாமம் தம்பதிகளின் மூத்த புதல்வனும், காமாச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், விமலாதேவி (தொல்புரம்), இராஜகுமாரி (லண்டன்), ஜெயந்தி (ஆசிரியர் உருத்திரபுரம்), மனோகரன் (லண்டன்), மனோகரி(கொழும்பு), சிவகுமார் (ரஞ்சன்-லண்டன்),காலஞ்சென்ற சுரேஸ் மேஜர் ரஞ்சன்/கண்ணன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இராமநாதன் (தொல்புரம்), பராபரன்(லண்டன்),கணேசதாசன் (அதிபர், உருத்திரபுரம் மகாவித்தியாலயம்),மேரி (லண்டன்),ஸ்ரீதரன்,(ஸ்ரீ-கொழும்பு), வைதேகி (லண்டன்),ஆகியோரின் மாமனாரும் கபிரதன், பகீரதி,சிந்துஜா (லண்டன்), சினைற (லண்டன்),தயாளன்,துவாரகன், வைஷ்ணவி, சுரேஸ்கண்ணா, பிரணவன், சிநதுரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்ன ன் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர்அறிவிக்கப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்தன்கேணிச் சந்தி,
சித்தன்கேணி.

(சி.10699)

தகவல்
ஸ்ரீதரன் [ஸ்ரீ-மருமகன்]



# இந்திய அணிக்குப் புதிய சவால்
# முதல் டெஸ்ட் இன்று ஆரம்பம்



இந்திய தென்ஆபிரிக்க அணிகளுக்கு இடையிலான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி கான்பூரில் இன்று தொடங்குகிறது.

இதை முன்னிட்டு இரு அணியினரும் கான்பூர் கிரீன் பார்க் மைதானத்தில் தீவிர பயிற்சி மேற்கொண்டனர்.

இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி வியாழக்கிழமை கான்பூர் வந்தடைந்தார். மற்ற வீரர்கள் அனைவரும் புதன்கிழமையே கான்பூர் வந்தடைந்தனர்.

அணியினருடன் காலையில் மேற்கொண்ட பயிற்சிக்குப் பிறகு நிருபர்களிடம் ராவிட் தெரிவிக்கையில்,

பொதுவாக ஆடுகளத்தின் தன்மை பற்றி கருத்துக் கூற நான் சரியான ஆள் கிடையாது. ஆனால், கான்பூர் ஆடுகளம் துடுப்பாட்டத்துக்குச் சாதகமான அம்சங்களுடன் தெரிகிறது. இந்தக் களம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு ஏற்றதாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

அப்படியானால், 3 சுழற்பந்து வீச்சாளர்களும், ஒரு வேகப்பந்து வீச்சாளருடனும் அணி களமிறங்குமா? என நிருபர்கள் கேட்டதற்கு, இருக்கலாம் எனத் தெரிவித்த ராவிட், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி டெஸ்டில் வெற்றி தந்த மும்பை ஆடுகளம் போல கான்பூர் இருக்குமா? என்பது எனக்குத் தெரியாது என்றார்.

எதுவாக இருந்தாலும் அணித் தலைவர் கங்குலி வந்த பிறகே உறுதிகூற முடியும் என்றார் ராவிட்.

# சுழலுக்கு எங்களுக்கு பயமில்லை; அவுஸ்.செய்த தவறை நாம்செய்யோம்

## சோன் போலக்




இந்தியா,தென் ஆபிரிக்கா இவ்விரு அணிகளுமே ஒரு மோசமான தொடருக்குப் பிறகு மீண்டும் விளையாட வந்திருக்கிறோம். அவுஸ்திரேலியாவிடம் இந்தியாவும்,இலங்கையிடம் நாங்களும் தொடரைப் பறிகொடுத்திருக்கிறோம். ஆகவே, எங்களை நிரூபிக்க இந்தத் தொடர் நல்ல வாய்ப்பு.

இந்தியா,அவுஸ்திரேலியா டெஸ்ட் தொடரின் வீடியோ பதிவுகள் எங்களிடம் இருக்கிறது. இந்தியவீரர்களின் பலம், பலவீனங்களைத் தெரிந்து கொண்டோம். மும்பை போலவே சுழலுக்குச் சாதகமாக ஆடுகளம் இந்தத்தொடரிலும் அமைக்கப்படலாம்... சுழல்பந்து வீச்சாளர்களுடன் இந்தியா களமிறங்கலாம். ஆனால்,எங்களுக்குப் பயமில்லை. அவுஸ்திரேலியர்கள் செய்த தவறை நாங்கள் செய்யமாட்டோம்.

இளம் வீரர்கள் தென் ஆபிரிக்க அணி, இந்திய மண்ணில் ஒரு இனிமையான அனுபவத்துக்குக் காத்திருக்கின்றது என்றார்.

# சிறப்பான ஆட்டம் இனிமேல்தான்
## ராவிட் எச்சரிக்கை



எனது மோசமான ஆட்டம் முடிந்துவிட்டது. சிறப்பான ஆட்டம் இனிமேல்தான் உள்ளது என்று இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான ராகுல் ராவிட் தென்னாபிரிக்காவிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவிற்கும், தென்னாபிரிக்காவிற்கும் இடையே இரண்டு டெஸ்ட் கொண்ட தொடர் நடைபெறவுள்ளன. இதன் முதலாவது டெஸ்ட் போட்டி இன்று கான்பூரில் தொடங்குகின்றது.

கான்பூரில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இந்திய கிரிக்கெட் அணியின் துணைத் தலைவரான ராகுல் ராவிட் மேற்கண்டவாறு கூறினார்.

நான் வலைப்பயிற்சியில் தீவிரமாக, கடுமையாக ஈடுபட்டு வருகிறேன். நான் நன்றாக ஆடத்தொடங்கினேன் என்றால் நீண்ட நேரம் விளையாடுவேன். எனது சிறப்பான ஆட்டம் இனிமேல்தான் உள்ளது என்றார்.

# ஜேக்கப் ஓரம் அதிரடி ஆட்டம்
# நியூசிலாந்து சவால் மிகு ஓட்டம் குவிப்பு
## அவுஸ்திரேலியா தடுமாற்றம்



பிறிஸ்பேனில் நடைபெற்றுவரும் நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது அவுஸ்திரேலிய அணி தனது முதலாவது இன்னிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 197 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஆரம்ப வீரர்கள் மத்தியூ ஹெய்டன் 8 ஓட்டத்துடனும், லாங்கர் ஓட்டம் எதுவும் பெறாமலும், பொண்டிங் 51 ஓட்டத்துடனும், லீமன் 8 ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். டேமியன் மார்ட்டினும், மைக்கல் கிளார்க்கும் ஆட்டமிழக்காது 59, 31 ஓட்டங்களைப் பெற்றுகளத்திலுள்ளனர். பந்து வீச்சில் ஜேகப் ஓரம், கிறிஸ் மார்ட்டின், டேனியல் விட்டோரி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றி ன்முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலாவதாக துடுப்பெடுத்தாடி தனது முதல் இன்னிங்சிற்காக 353 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் அவ்வணியில் சகலதுறை வீரர் ஜேகப் ஓரம் 126 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதிருந்தார். இன்று போட்டியின் 3ஆம் நாளாகும்.

# ரஷ்ய பல்கலைக்கு முதல் இடம்

மலேசியாவில் அண்மையில் நடைபெற்ற பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான உலக செஸ் சம்பியன் போட்டியில் ரஷ்ய பல்கலைக் கழகம் முதலிடத்தைப் பெற்றது. கோலாலம்பூர் மலேயப் பல்கலை கழகத்தில் நடைபெற்ற இப்போட்டியில் 16 நாடுகளைச் சேர்ந்த 33 பல்கலைக்கழக அணிகள் பங்கேற்றன.

இதில் 153 புள்ளிகளைச் சேர்த்து ரஷ்யாவின் வடமேற்கு பொது நிர்வாக அக்கமி பல்கலைக் கழகம் முதலிடத்தைப் பெற்றது. சீனாவைச் சேர்ந்த தியான்ஜின் வெளிநாட்டுப் படிப்பு மையம் (149.5 புள்ளிகள்) 2ஆம் இடத்தையும், ஈரானைச் சேர்ந்த இஸ்லாமிக் ஆசாத் பல்கலைக்கழகம் (143.5 புள்ளிகள்) 3ஆவது இடத்தையும் பெற்றன.

# சீன கால்பந்து அணிக்கு ஏமாற்றம்
# வாய்ப்பை பறித்தது குவைத்

ஆசியப் பிரிவில் சீனாவுக்கு பெரிய ஏமாற்றம். கடந்த முறை உலகக் கோப்பை போட்டிக்கு தகுதி பெற்ற இந்த அணி இம்முறை வாய்ப்பை இழந்தது. நேற்று முன்தினம் நடந்த போட்டியில் சீன அணி ஹொங் கொங்கை 7-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. ஆனாலும் கோல் அடிப்படையில் குவைத் தகுதி பெற்றது.

குவைத் அணி மலேசியாவை 6-1 என்ற கோல் கணக்கில் வென்றது. சீனா மற்றும் குவைத் தலா 15 புள்ளிகள்பெற்று சமநிலையில் இருந்தன. ஒட்டு மொத்தமாக சீனா 14, குவைத் 15 கோல் அடித்து இருந்தன. இந்த ஒரு கோல் வித்தியாசம் சீனாவின் வாய்ப்பை பறித்தது. உலகக்கோப்பை போட்டிக்குத் தகுதி பெறத் தவறியதை அடுத்து சீனாவின் பயிற்சியாளர் ஏரி ஹான் (நெதர்லாந்துக்காரர்) நீக்கப்படுகின்றார்.

இதேவேளை ஐரோப்பா கண்டத்துக்கான பிரிவில் கிரீஸ் அணி கசகஸ்தானை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. உக்ரைன் அணி துருக்கியை (30), நெதர்லாந்து அணி அந்தோராவை (3-0), செக்குடியரசு அணி மாசிடோனியாவை (2-0), போர்த்துக்கல் அணி லக்சம்பார்க்கை (5-0) வென்றன.

ஆபிரிக்க கண்டத்துக்கான பிரிவில் கென்யா அணி கினியாவை 2-1 என்ற கோல்கணக்கில் வென்றது. இப் போட்டியில தோல்வி அடைந்த போதும் கினியா அணி 8 புள்ளிகளுடன் முதல் இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது. அமெரிக்க பகுதிக்கான போட்டியில் கேஸ்டாரிக்கா, ஹோண்டுராஸ் இடையிலான போட்டி கோல் அடிக்கப் படாமல் சமநிலையில் முடிந்தது.

ஜமேக்கா, அமெரிக்கா இடையிலான போட்டியும் சமன் (1-1) ஆனது. இப்பிரிவில் அமெரிக்கா, மெக்சிக்கோ, கவுதமாலா அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறி விட்டன. 6 அணிகள் பங்கேற்கும் இந்த சுற்றின் முடிவில், முதல் மூன்று இடங்களைப் பெறும் அணிகள் உலகக் கோப்பைப் போட்டிக்குத் தகுதி பெறும்.

# உலகக் கோப்பை தகுதி கால்பந்து போட்டி
# பிரேசில் அணிக்கு அதிர்ச்சித் தோல்வி



எடிசன் மென்டஸ்

உலக கோப்பை தகுதி கால்பந்து போட்டியில் நடப்புசாம்பியனான பிரேசில் அணி ஈக்வடோரிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்தது.

ஜேர்மனியில் 2006இல் உலக கோப்பை கால்பந்து தொடர் நடக்கவுள்ளது. இதற்கான தகுதிச் சுற்று போட்டிகள் பல்வேறு இடங்களில் நடந்து வருகின்றன. தென் அமெரிக்க பகுதிக்கான போட்டியில் கடந்த புதனன்று பிரேசில் அணி ஈக்வடோரை சந்தித்தது. ஈக்வடோர் தலைநகர் குயிட்டோவில் நடந்த இப்போட்டியில் பிரேசில் அணியில் ரொனால்டோ, ரொனால்டினோ,கபு என நட்சத்திர வீரர்கள் அனைவரும் இடம்பெற்றுருந்தனர். இதனால் இந்த அணி எளிதாக வெற்றிபெறும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சொந்த மண்ணில் விளையாடிய ஈக்வடோர் வீரர்கள் கடும் போட்டியை கொடுத்தனர். முதல் பாதியின் முடிவில் இரு அணிகளாலும் கோல் எதுவும் அடிக்க இயலவில்லை.

77 ஆவது நிமிடம் இதை அடுத்து இரண்டாவது பாதி ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. பிரே சில் வீரர்கள் கோல் அடிக்க அதிவிரைவாக முன்னேறி சென்றனர். ஆனாலும் ஈகுவடோரின் தற்காப்பு பகுதியை தகர்க்க இயலவில்லை.

இந்தச் சூழலில் 77ஆவது நிமிடத்தில் அந்த அற்புதம் நிகழ்ந்தது. ஈக்வடோரின் எடிசன் மென்டஸ் பந்தை தாழ்வாக அடிக்க அதை பிரேசில் கோல் கீப்பர் திடா தடுக்கத் தவறினார். இதன் மூலம் ஈக்வடோர் 1-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது. பிரேசில் அணியோ தனது கால்பந்து வரலாற்றில் இரண்டாவது முறையாக ஈக்வடோரிடம் தோல்வியைச் சந்திக்க வேண்டியதாயிற்று.

மற்றுமொரு போட்டியில் ஆர்ஜென்டீனா அணி வெனிசுலாவை 3-2 என்ற கோல் கணக்கில் வென் றது. இதேபோல் கொலம்பியா அணி பொலிவியாவை (1-0), உருகுவே அணி பராகுவேயை (2-0), பெரு அணி சிலியை (2-1) வென்றன. தற்போது தென் அமெரிக்க பிரிவில் ஆர்ஜென்டீனா 22 புள்ளி களுடன் முதல் இடத்தில் உள்ளது. பிரேசில் 20 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. இப்பிரிவில் முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும் அணிகள் உலகக் கோப்பைப் போட்டிக்குத் தகுதி பெறலாம். எனவே, பிரேசிலுக்குப் பிரச்சினை எதுவும் ஏற்பட வாய்ப்பில்லை.




## மாவீரர் வெற்றிக்கிண்ண மென்பந்து கிரிக்கெட் போட்டி

மாவீரர் வெற்றிக்கிண்ணத் திற்கான மென்பந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று காலை 8.00 மணிக்கு கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டிக்கு பதிவு செய்த கழகங்கள் தங்களை தயார்ப் படுத்தி கொள்வதுடன் போட்டி சுற்று நிருபம் கிடைக்காதவர்கள் கிளி / மாவட்டத்திலுள்ள விளையாட்டுத்துறைச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட விளை யாட்டுத்துறை பொறுப்பாளர் கேட்டுக்கொள்கின்றார்.

15 ஓவர்கள் மட்டுப்படுத்தப் பட்ட போட்டியில் 21 அணிகள் கலந்துகொள்கின்றன.

# மாஸ்டர்ஸ் டென்னிஸ்
# அரையிறுதியில் பெடரர்




ஏ.டி.பி.மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் அரை இறுதியில் விளையாட சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் தகுதிபெற்றுள்ளார்.

அமெரிக்காவின் ஹூஸ்டன்நகரில் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் நேற்று முன்தினம் நடந்த காலிறுதிப் போட்டியில் முதல் நிலை வீரரான சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், அவுஸ்திரேலியாவின் லேடன் ஹெவிட்டை வீழ்த்தினார். மழையால் மூன் றரை மணி நேரம் தாமதமாக தொடங்கிய இந்தப் போட்டியில் பெடரரின் கையே தொடக்கத்தில் இருந்து ஓங்கியிருந்தது. விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் பெடரர் 6-3, 6-4 என்ற எளிதான செட்களில்ஹெவிட்டை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். இது சர்வதேச டென்னிஸ் போட்டிகளில் இவர் பெறும் தொடர்ச்சியான 20 ஆவது வெற்றி. இந்த ஆண்டில் மட்டும் இவர் விளையாடிய 77 போட்டிகளில் 71இல் வெற்றி பெற்றுள்ளார். 10 சம்பியன் பட்டங்களையும் வென்றுள்ளார்.

# மாவீரர் வெற்றிக் கிண்ண கால்பந்து
# பரபரப்பான போட்டிகள் ஆரம்பம்

தமிழீழ விளையாட்டுத்துறையினரின் யாழ்.மாவட்ட பிரிவினர் நடாத்தும் மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்கான (11) பதினோரு போர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி பருத்தித்துறை, வலிகாமம், யாழ் லீக்குகளின் பலம் வாய்ந்த ஆறு அணிகள் ஒவ்வொருலீக்கிலும் தெரிவு செய்யப்பட்டு போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வற்றின் கால் இறுதியாட்டங்கள் 18ஆம் திகதி நவாலி சென் பீற்றர்ஸ் எதிர் யங்கென்றீஸ்சினரும், 19ஆம் திகதி அன்ரனிஸ் எதிர் சிவானந்தாவும்,20ஆம் திகதி சென்நிக்லஸ் எதிர் பாடுமீன் அணியுடனும் மோதிக்கொண்டன. அரையிறுதியாட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள சென்மேரிஸ் அணியுடனான 19ஆம் திகதி கால் இறுதியாட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அணி நாளை அரையிறுதியாட்டத்தில் மோதவுள்ளன. 18ஆம் திகதியும் 20ஆம் திகதியும் கால் இறுதி யாட்டத்தில் தெரிவு செய்யப்படுகின்ற அணிகள் 22ஆம்திகதி அரையிறுதியா ட்டத் தில் மோதிக்கொள்கின்றன. இறுதியாட்டம் 24.11.2004ஆம் திகதி வடமராட்சி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

## சிந்தனைக்கு



உழைக்கும் மக்களின் உழைப்புச் சக்தியே ஒரு தேசத்தின் ஜீவாதார சக்தி.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 20-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## பற்றாக்குறையை நிவர்த்திக்க வழி?

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது வரவு - செயலவுத்திட்டம் தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதிகளை பூரணமாக நிறைவு செய்யாது போயினும் மேலும் சில வாக்குறுதிகள் குறித்து கவனம் செலுத்தியுள்ளது. போன்றதொரு தோற்றப்பாட்டை வெளிக்காட்டுவதாய் அமைந்துள்ளது.

நிதி அமைச்சர் சரத் அமுனுகம வெளிநாட்டவரின் ஆலோசனையின்றி வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது . எனப் பெருமை பேசிக்கொண்டுள்ளார். இவ்வரவு செலவுத் திட்டத்தின் மூலம் தேர்தல் வாக்குறுதியான அரசு ஊழியர்களுக்கு 70 சதவீத சம்பள உயர்வு வழங்கப்படும் என்ற வாக்குறுதி நிறைவு செய்யப்படவில்லை ஆயினும் 40 சதவீத உயர்வு திட்டம் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை இச்சம்பள உயர்வும் இரு கட்டங்களாக வழங்கப்படவுள்ளமையும் சுட்டிக்காட்டப்படத்தக்கதாகும். அதாவது இவ் அதிகரித்த சம்பளத் தொகையை முழுவதுமாகப் பெற்றுக் கொள்ள 2006 ஆம் ஆண்டு சனவரி வரையில் காத்திருக்க வேண்டியதாக இருக்கும். அதாவது ஐ.ம.சு.முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 20 மாதங்களின் பின்னரே இவ்உயர்வு வழங்கல் வந்தடையும். அதாவது மூன்று மாதங்களில் 70 சதவீத சம்பள உயர்வெனக் கூறிய அரசாங்கம் 20 மாதங்களில் 40 சதவீத சம்பள அதிகரிப்பையே வழங்க முன்வந்துள்ளது.

இது தவிர அத்தியாவசியப் பொருட்களுக்கான வற்வரிக்குறைப்பு போன்ற சில சலுகைகள் வழங்கப்பட்டிருப்பது வரவேற்கத் தக்க தாகினும் இவை விலை வாசி ஏற்றத்தில் தாக்கத்தை அல்லது குறைப்பை எந்தளவிற்கு ஏற்படுத்தும் என்பது கேள்விக்குரியதாகவே இருக்கும்.

எடுத்துக்காட்டாக அரசாங்கம் தனது முதலாவது வரவு செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கு இரு நாட்களுக்கு முன்பதாகவே குழந்தைகளுக்குகான பால் மாஉட்பட்ட ஒன்பது பால் மாவுகளுக்கான விலைகளை 30 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

இதை ஒத்ததாகவே பெற்றோலியப் பொருட்களின் விலை உயர்வும் உள்ளது. சர்வதேச சந்தையில் பெற்றோலியப் பொருட் களின விலை கணிசமான அளவு குறைவடைந்துள்ள போதும் இலங்கையில் பெற்றோலியப் பொருட்களின் விலை குறைக்கப்படாதது மட்டுமல்ல மேலும் அதிகரிக்கப்படலாம் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்ததாக அரசாங்கம் ஒரளவிற்கு கவர்ச்சி கரமான வரவு செலவுத்திட்டத்தைத் தயாரித்திருப்பினும் சிறிலங்கா பாராளு மன்றத்தில் இதுவரை சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் மிக உயர்ந்தளவு பற்றாக்குறைகளைக் கொண்ட வரவு செலவுத் திட்டத்தை ஐ.ம.சு. முன்னணி அரசாங்கம் சமர்ப்பித்துள்ளது. துண்டு விழும் தொகையாக 17300 கோடி ரூபா உள்ளது.

ஆகையினால் வரவு செலவுத்திட்டம் கவர்ச்சிகரமானதாக இருப்பினும் அது நிறைவு செய்யப்படுவதற்கு திட்டத்தில் காணப்படும் பற்றாக்குறை நிறைவு செய்யப்பட வேண்டும் இதற்குத் தெளிவான திட்டமோ அறிவிப்போ வரவு-செலவுத் திட்டத்தில் இல்லை இந்நிலையில் வரவு-செலவுத்திட்டம் குறித்துப் பெருமையாகப் பேசிக் கொள்வதில் பயன்ஏற்பட்டுவிடமாட்டாது.

வரவு-செலவுத்திட்டத்தின் பெரும் பற்றாக்குறை சில இரகசியத்திட்டங்கள் மூலம் நிவர்த்திக்கப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் சந்தேகிக்கப்படுகின்றது. குறிப்பாக அரசாங்கத்தின் வருவாய் தரும் சில துறைகளை அரசாங்கம் வெளிநாட்டு கம்பனிகளுக்கு விற்றுவிடலாம் எனக் கருதப்படுகின்றது. இதன் மூலம் கிடைக்கப்பெறும் பணம் இப் பற்றாக்குறையை நிவர்த்திக்கப் பயன் படுத்தலாம் என சில அரசியல் ஆய்வாளர்கள் ஆரூடம் கூறுகின்றனர்.

இதே சமயம் அரசாங்கம் புதிய நோட்டுக்களை அச்சிடுவதன் மூலம்இத்தொகையின் ஒரு பகுதிகளை ஈடு செய்யலாம் எனவும் ஊகங்கள் உண்டு. இதற்கான பணி தொடங்கப்பட்டுள்ளதாக எதிர்கட்சியான ஐ.தே.கட்சி ஏற்கனவே குற்றம் சாட்டியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

ஆகையினால் வரவுசெலவுத்திட்டம் கவர்ச்சி கரமானதாக இருப்பினும் குறைநிரப்பிற்கு ஆதாரம் ஏதுமற்றதாக கணப் படுவதினால் விலைவாசி ஏற்றமும் பணப் பெறுமதியின் வீழ்ச்சியும் இக்கவர்ச்சிகளை எல்லாம் குறுகிய காலத்திற்குள் சீர் குலைந்துவிடக்கூடும்.அவ்வாறு சீர் குலைக்கப்படுமானால் மீண்டும் ஒரு இருண்ட யுகத்திற்குள் செல்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

# அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றவில்லை

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவு செலவுத்திட்டம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறை வேற்றவில்லை என எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார் நேற்றுப் பாராளு மன்றத்தில் உரையாற்றிய அவா,2005 ஆம் ஆண்டின் வரவு செலவுத திட்டம் பணவீக்கத்தை பாரிய அளவில் அதிகரிக்கப் போகிறது எனவும் குறிப்பிட்டார். அரசாங்க ஊழியர் களின் ஒரு நாள் வேலை நேரத்தை ஒரு மணித்தியாலத்தால் அதிகரித் தமையானது சர்வதேச தொழில் சட்டத்தை மீறும் செயலாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கத்தின் வரவு-செலவுத்திட்டம் வாழ்க்கை செலவுப்புள்ளியை வான் அளவுக்கு உயர்த்தப்போகிறது எனப் பாராளு மன்ற உறுப்பினர் ஜி எல் பீரிஸ் தெரிவித்தார். இது சனாதிபதியின் குறுகிய அரசியல் நோக்கமான சர்வசன வாக்கெடுப்பு மற்றும் அரசியலமைப்பு மாற்றம் என்ப வற்றை மையமாகக் கொண்டு செய்யப்பட்டதாகும்

எனவே இதனை ஐக்கிய தேசியக் கட்சி மக்கள் நலன் திட்டமாக ஏற்றுக்கொள்ளவில்லை என அவர் தெரிவித்தார்

இதேவேளை அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டம் தொடர்பில் கருத்துரைத்த மேல்மாகாண ஆளு நரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்க தலைவ ருமான அலவி மௌலானா இது மக்கள் வரவு செலவுத்திட்டம் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துரைத்த ஹட்டன் நஷனல் வங்கியின் தலைவர் ரியன்சி விஜயதிலக்க வரவு செலவுத்திட்டம் கிராமிய பொருளாதார திட்டங்களை மையப்படுத்தியுள்ளது. இது சுய பொருளாதாரத்தை வளப்படுத் துவதற்காக மேற்கொள்ளப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. என்றாலும் இதில் வடக்கு கிழக்கு தொடர்பாக எவ்வித அபிவிருத்தி திட்டங்களும் முன்மொழியப் படாமை வருந்துதற்குரியது. சமா தான முனைப்புகள் மேற்கொள் ளப்படும் போது இவ்வாறான திட்ஙகள் முன்வைக்கப் படுருககு மானால் அது வடக்கு கிழக்கு மக்களுக்கு திருப்தியை கொடுத் திருக்கும் என்றார். (32)

# ஒருமணி நேர வேலை அதிகரிப்பு தொழிலாளர் உரிமையை மீறும் செயல்

### -தொழிற்சங்கங்கள் கண்டனம்

(கொழும்பு)

புதியவரவு செலவுத்திட்டத்தின் பிரகாரம் அரச ஊழியர்களின் வேலை நேரம் ஒரு மணித் தியாலயத்தால் அதிகரிக்கப்பட்டு, ஒன்பது மணிநேரமாக்கப்பட்டமை தொழிலாளர்களின் உரிமையை மீறும் செயல் என தொழிற்சங் கங்கள் குற்றம் சாட்டி உள்ளன.

இதேவேளை அரச ஊழியர்களின் வேலை நேரத்தை ஒன்பது மணித் தியாலயமாக உயர்த்தியமையை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கண்டித்ததுடன் தமது கடும் எதிர்ப்பையும் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துளள அறிக்கையில், அரச ஊழியர்களின் வேலை நேரத்தை ஒன்பது மணித் தியாலமாக்கியுள்ளமை சர்வதேசத் தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவை நேரத்திற்கு மாறாக அமைந்துள் ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இச்செயலானது அரசாங்க ஊழியர்களின் உரிமை களைப் பறிக்கும் செயலென மேலும் கூறிய அவர், இந்த யோசனைகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுத்து ஊழியர்களின் எட்டுமணி நேர சேவைக்காலத்தை உறுதிப்படுத்த உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை இது தொடர்பாக அரச உத்தியோகத்தர்கள் சிலரிடம் கேட்டபோது ஒருவர் கருந்துக் கூறுகையில் ஒரு மணித்தியாலத்தை விட அதிகமாகவும் நாம் வேலை செய்யத் தயாராக உள்ளோம். இருப்பினும் தற்போது எந்தவொரு அரச நிறுவனத்திலும் சிறந்த முகாமைத்துவத்தின் கீழ் எட்டுமணி நேரமும் சிறந்த முறையில் வேலை செய்யும் நிலைமை இல்லை என்றார்.

மற்றொருவர் கருத்துத்தெரிவிக் கையில், உலக வங்கியின் கொள் கைகளுக்கு அமைய சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று வேலை நேரமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதையே இவர்கள் வெளிப்படுத்தி உள்ளனா். அதிக நேரம் வேலைசெய்வதுடன் விலைவாசி உயர்வுகளுக்கு இடம் கொடுத்து இரண்டாயிரத்து ஐந் நூறு ரூபா சம்பள உயர்வுக்குள் வாழ்க்கையைக் கொண்டு செல்ல வேண்டும். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனக் கூறினார்.

இதேவேளை வேறொருவர் கூறுகையில், ஒன்பது மணிநேர சேவை நேரத்தை நடைமுறைப் படுத்தி உள்ளனர். இதன் மூலம் ஒரு மணிநேரம் அதிகமாக வேலை செய்யவேண்டும். இதற்கமைய ஒரு மணித்தியாலயம் மேலதிக சேவையை வழங்குவதன் மூலம் அதற்கான மேலதிகக் கொடுப பனவு கணக்கிடப்பட்டுப் பார்த்ததில் ஆகக்குறைந்தது ஆயிரத்தி இரு நூறு ரூபா ஆவது வரும். இதன் மூலம் சம்பள அதிகரிப்பு இடம் பெறவில்லை என்றே கூறலாம் என்றார்.

## புதிய வரவு-செலவுத்திட்டத்தில் ஜே.வி.பி.யின் ஆலோசனைகள் புறக்கணிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம் முன்வைத் துள்ள புதிய வரவு செலவுத் திட்டத்தில் ஜே.வி.பி முன்வைத்தஆலோ சனை புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 வருடங்களைப் பூர்த்தி செய்த முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதிய கொடுப்பனவை நீக்க வேண்டும் என ஜே.வி.பி ஆலோசனை ஒன்றை முன்வைத்திருந் ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. நிதி அமைச்சர் சரத் அமுனுகம ,நிதி அமைச்சின் செயலாளர் ரி.பி ஜெயசுந்தர ஆகியோரைச் சந்தித்து இந்த விடயம் குறித்து ஜே.வி.பி செயலாளர் ரில்வின் சில்வா, பிரச்சாரா செயலாளர் விமல் வீரவன்ச ஆகியோர் கடந்த செப்ரெம்பர் மாத இறுதியில் பேசியுள்ளனர். ஜே.வி.பியின் ஆலோசனைகள் கவனத்தில் எடுப்பதாக நிதி அமைச்சர் உறுதி அளித்திருந்த போதிலும் நேற்று முன்தினம் வரவு செலவுதிட்டம் சபையில் சமர்ப்பிக் கப்பட்ட போது இந்த விடயம் அதில் இடம் பெறவில்லை என்ற விடயம் ஜே.வி.பியினருக்கு தெரிய வந்துள்ளது. இது குறித்து ஜே.வி.பியினர் பிரதிபலிப்பு எதுவும் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை .(32)

# பயணி மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதுடன் தொடர்புடைய பொலிசார் கைதாகவில்லை

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் அனுராதபுரம் யாழ்ப்பாணச் சந்தியில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி 13 பேருடன் சென்று கொண்டிருந்த பயணிகள் வான் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பயணி ஒருவர் கொல்லப்பட்டசம்பவத்தில் தொடர்புடைய பொலிசாரை நீதிமன்ற உத்தரவின்படி கைது செய்வதற்கு அனுராதபுரம் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.ஜ யவர்த்தன தவறியுள்ளார். எனக் காரணம் காட்டி,குறிப்பிட்ட வழக்கின் தடயப்பொருட்களை அனுராதபுரம் மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைப்பதற்காக விடுத்த உத்தரவை வியாழக்கிழமை வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ் செழியன் இரத்துச் செய்துள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்ப வத்தில் சந்தேக நபர்களாகத் தெரி விக்கப்பட்டுள்ள 3 பொலிசாரையும் கைது செய்யுமாறு வவுனியா நீதி மன்றம் மரண விசாரணையில் உத தரவிட்டபோது, வவுனியா நீதி மன்றத்தில் ஆஜராகிய உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜயவர்த்தன சந்தேக நபர்களை அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவிருப் பதாக உறுதியளித்தவாறு நடந்து கொள்ளவில்லை என சுட்டிக் காட்டியுள்ள நீதவான் வாகனத்தை நிறுத்துமாறு சைகை செய்தபோது பொலிசாரின் உத்தரவை மீறிச் சென்றதற்காகவே துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஆனால் இந்தச் சம்ப வத்தில் சம்பந்தப்பட்ட வாகனச் சாரதி, சம்பவ இடத்தில் வாகனத் தைச் செலுத்தி வந்தபோது, மண் நிற கோட் அணிந்திருந்த ஒருவர் டோச் வெளிச்சத்தின் மூலம் வாகனத் தை நிறுத்துமாறு சைகை செய்த தாகவும். கொள்ளையர்களே வாகனத்தை நிறுத்த முயற்சிக் கின்றார்கள் எனக்கருதி வாகனததை நிறுத்தாமல் வந்ததாகவும், வாகனத்தைநிறுத்துமாறு சைகை செய்தது பொலிசார் என்பது தனக்குத் தெரியாது எனத் தெரிவித்துள்ளார். (21)

# சனாதிபதி சந்திரிகாவின் ஊடகப்பேட்டியில் முன்னுக்குப் பின் முரணான கருத்துக்கள்

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கண்டனம்

(கொழும்பு)

அரச தொலைக்காட்சிக்கும், இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்துக்குமான சமாதான பேச்சுக்கள் தொடர்பான சனாதிபதி சந்திரிகாவின் நேர்காணலில் அரசின் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக முரண்பாடான, முன்னுக்குப்பின் முரணான கருத்துக்கள் இருப்பதுடன் அவரின்கூற்றினால்சமாதானமுன்னெடுப்புத் தொடர்பாக உண்மையான நிலைப்பாட்டில் பொது மக்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளார் எனத் தமிழர் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று ஊடகங்களுக்கு ஒரு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளனர். தனது சொந்த நிகழ்ச்சி நிரலுடன் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்செல்ல முடியும் என சனாதிபதி வெளிப்படையாக நம்புவதாகவும் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

சனாதிபதி,இருபிரதானகட்சிகளும்,அதாவது,ஐக்கிய தேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு எண்ணியுள்ளதாகக் கூறியுள்ளார். ஐ.தே.க மீண்டும் அரசு தாமதிக்காமல் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் தீர்மானங்களின் படி பேச்சுக்களை ஆரம்பிக்கும்மாறு அறிவித்துள்ளது. தேசிய நல்லிணக்க ஆலோசனை சபையை நிறுவுவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி சமூகமளிக்காததற்கான ஒரு விடயமாக விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையின் அடிப்படையில் பேச்சுக்கள் முதலில் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையே முன்வைக்கப்பட்டது. இன்றும் அரசினுள்ளே உள்ள சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான எதிரெதிரான முரண்பாடுகள் வற்புறுத்தும் அரசியற் சட்டமாற்றத்திற்கு ஆகக்குறைந்தது ஜே.வி.பியின் ஆதரவு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை உறுதிப்படுத்த அரசிற்குத் தேவை. அம்மாற்றம் அதனது அரசியல் நிச்சயத்தன்மைக்கு முக்கியமானது. விடுதலைப்புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான நிகழ்ச்சிநிரலை அமுலாக்க அரசால் முடியாது. அரசின் அரசியலமைப்பு மாற்றம் நோக்கிய படிமுறை மிகப்பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை மனதில் வைத்துக்கொள்ளும்படி அரசிற்கு தெரிவிப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. நிகழ்ச்சிநிரல் தெரியாத பேச்சிற்கு விடுதலைப்புலிகளை அழைப்பதிலும், அரசு விடுதலைப்புலிகளுடன் இம்மாதத்தினுள் பேச்சுக்களை ஆரம்பிப்பதிலும் விடுதலைப்புலிகளுடன் அரசு முதலில் தொடர்பு கொள்ள வேண்டும். அரசாங்கம் இடைக்காலத் தன்னாட்சி உரிமை அடிப்படையிலும் இடைக்கால தன்னாட்சி உரிமை சார்பான ஏனைய தீர்மானங்கள் தொடர்பாகவும் பேச்சுவார்த்தை மேசையில் பேச்சுக்களை ஆரம்பிக்க ஒரு வேண்டும். ஐக்கிய தேசியக்கட்சி விடுதலைப்புலிகளுடன் அரசு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனை அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க ஒரு உடன்படிக்கையை மேற்கொள்ள நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதாக வாக்குறுதி அளித்துள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இவ்வாறான உடனபடிக்கைக்கு ஆதரவு வழங்கும். எனவே அரசு பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை உறுதிப்படுத்த முடியும் என மேலும் அவ்அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# மாவீரர்களின் பெற்றோருக்கு புங்குடுதீவில் கௌரவிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வு புங்குடுதீவு சிவலைப்பட்டி சனசமூக நிலையத்தில் சனசமூக நிலையத்தலைவர் லோகநாதன் தலைமையில் நேற்று மாலை மூன்று மணிக்கு ஆரம்பமானது.

இதன்போது தலைமை உரையைஅடுத்து வரவேற்புரையை சனசமூக நிலையத்தின் செயலாளர் சிவகுமாரன் ஆற்றினார். நினைவுரையை யாழ். மாவட்டத்தின் ஊடகப்பேச்சாளர் கனகலிங்கம்,தியாகிதிலீபன் மருத்துவமனையின் பொறுப்பாளர் வண்ணனும் ஆற்றினர்.

சிறப்புரையினை சர்வதேச மாணவர் பேரவையின் உறுப்பினர் கிருஷ்ணா,புங்குடுதீவு அரசியல் துறைப்பொறுப்பாளர் இசைச்செல்வன் ஆகியோர் ஆற்றினர். இந்நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர், அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வடக்கு கிழக்கு மாகாணங்களில்

# ஆயிரம் ஆசிரியர்களை தெரிவுசெய்யும் நேர்முகப்பரீட்சை 30 ஆம் திகதி ஆரம்பம்

வடக்கு கிழக்கு மாகாண தமிழ்மொழி மூலப்பாடசாலைகளில்க.பொ.த. உயர்தரத் தகுதிபெற்றவர்களிலிருந்து ஆயிரம் பேரை ஆசிரியர்களாக நியமிப்பதற்கான நேர்முகப்பரீட்சை நவம்பர் 30 ஆம் திகதி ஆரம்பமாக விருப்பதாக மாகாணக் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

க.பொ.த. உயர்தர தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டு போட்டிப்பரீட்சை நடத்தப்பட்டிருந்தது. அப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் சுமார் 1500 பேரின் பெயர்கள் வடக்குகிழக்கு மாகாணக்கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இவர்களில் ஆயிரம் பேரை நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவுசெய்வதற்கு மாகாணக்கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றும் படி கோரி சுமார் 1500 பேருக்கும் மாகாணக்கல்வி அமைச்சு கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது.

நேர்முகப்பரீட்சை நவம்பர் 30 ஆம் திகதி ஆரம்பமாகி டிசம்பர் 16 ஆம் திகதிவரை புதன்கிழமை, ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த நாட்களில் திருகோணமலையில் மாகாணக்கல்வி அமைச்சு அலுவலகத்தில் மட்டுமே நடைபெறும்.

தினமும் 120 பேர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். திகதி குறிப்பிட்டு கடிதங்கள் அவர்களுக்கு அகுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் மாகாணக்கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேர்முகப்பரீட்சையை அதற்கென நியமிக்கப்படும் இரண்டு குழுக்கள் நடத்தவுள்ளன. நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு ஆயிரம் பேர் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர். இவர்களில் 400 பேர் ஆங்கில ஆசிரியர்களாக நியமனம் பெறுவர். 300 பேர் ஆரம்ப ஆசிரியர்களாக நியமனம் பெறுவர் உடற்கல்வி ஆசிரியர்களாக 75 பேரும் கடற்றொழில் நுட்பப்பாட ஆசிரியர்களாக 75 பேரும், நியமிக்கப்படவுள்ளனர். கணித பாடஆசிரியர்களாக 50 பேரும் விஞ்ஞான பாட ஆசிரியர்களாக 35 பேரும் நியமனம் பெறுவர். எஞ்சியோர் சங்கீதம், நடனம், சித்திரம், விவசாயம் மற்றும் மனையியல் ஆகியபாடங்களைப் போதிப்பதற்கான ஆசிரியர்களாக நியமிக்கப்படுவர் என்று மாகாண கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (25)

# பேச்சுவார்த்தைக்கு வருமாறு புலிகளை தான் அழைக்கிறாராம்

## பி.பி.ஸிக்கு சந்திரிகா தெரிவிப்பு

இலங்கை சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடங்குவதற்கு விடுதலைப்புலிகள் முன்வரவேண்டுமென்று பி.டீ.சிக்கு அளித்த பேட்டியில் மீண்டும் ஒரு முறை கூறியுள்ளார்.

இதனடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவது பற்றி பி.பி.சி நிருபர் சனாதிபதியிடம் கேட்டபோது இடைக்கால நிர்வாக சபை குறித்து நாங்கள் பேசத்தயார் என்று விடுதலைப்புலிகளை நாங்கள் அழைக்கிறோம். இடைக்கால நிர்வாகம் குறித்த புலிகளின் பிரேரணைகள் குறித்தும் நாங்கள் பேசத்தயார். ஆனால் அது குறித்து தங்களுக்கு பல அபிப்பிராயங்கள் அதாவது பதில்கள் இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். அது உண்மை தான் அது இருக்கத்தான் செய்கிறது. வாருங்கள் அது பற்றிப் பேசலாம் என்று தான் அழைக்கின்றோம் என்றும் சனாதிபதி தெரிவித்தார்.

அதேவேளை தம்முடைய ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.வி கட்சி சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றது என்ற குற்றச்சாட்டையும் சனாதிபதி மறுத்துள்ளார்.

ஜே.வி.பி சொல்வதெல்லாம் இது தான் மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. விடுதலைப்புலிகளின் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் நிபந்தனையில் மட்டும் பேசுவதற்கு தாங்கள் தயாராக இல்லை என்றுதான் ஜே.வி.பி சொல்கின்றது. ஏனெனில் விடுதலைப்புலிகளின் பிரேரணையில் 3 பிரிவுகள் இருக்கின்றன. அவை இலங்கை என்ற இந்த நாட்டிற்கு பெரும் பாதிப்பைக்கொண்டுவரக்கூடியவை. இடைக்கால நிர்வாகம் குறித்த பிரேரணை அப்படி இருக்கவே முடியாது என்றும் சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

## கொழும்பு...

காணப்பட்டது. இந்த இரு வாகனங்கள் சம்பந்தமாக தாம் விசாரணைகள் நடத்தி வருவதாக பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இதேவேளை, சரத் அம்பேபிட்டியவைக் கொலை செய்தவர்களை கைது செய்வதற்கு உடனடி விசாரணைகளை ஆரம்பிக்குமாறு சனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் குறித்து அறிந்ததும் சனாதிபதி பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவிற்கு இந்த உத்தரவை வழங்கியதாக சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் சந்தேகத்திற்குரியவர்கள் தப்பிச் செல்லாதவாறும் கொழும்பில் இருந்து வெளியேறும் மற்றும்கொழும்பிற்குள்வரும்பாதைகளைத் தற்காலிகமாக மூடுமாறும் சனாதிபதி உத்தரவிட்டுள்ளதாகவும் சனாதிபதி செயலகத்தால் விடுக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலை செய்யப்படுவதற்கு முன்னர் நேற்று முற்பகல் கெரோயின் போதைப் பொருள் விநியோகம் செய்து வந்ததாகக் கூறப்படும் வத்தளையைச் சேர்ந்த சந்தனம்பிள்ளை திரேசா என்ற பெண்ணிற்கு மரண தண்டனை வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நீதிபதி முக்கிய பல வழக்குகள் குறித்த தீர்ப்புக்கள் பலவற்றை வழங்கியவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## விளையாடி...

துப்பாக்கிப் பிரயோகத்தையடுத்து அங்கு விளையாடிக் கொண்டிருந்த இராசேந்திரம் சுரேஷ்குமார் (வயது-21) மற்றும் பொன்னுத்துரை தெய்வேந்திரம் (வயது-21) ஆகிய இரு இளைஞர்களும் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளனர். இவர்களிருவரும் வல்வெட்டித்துறை ஆதிகோவில் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

இதேவேளை, அங்கு விளையாடிக் கொண்டிருந்த மற்றொருவரான பொன்னுத்துரை தெய்வேந்திரம் (வயது-34) என்பவர் படுகாயமடைந்துள்ளார். ஆதிகோவிலடிப் பகுதியைச் சேர்ந்தவரான இவர் சிகிச்சைக்காக வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அத்துடன் கொல்லப்பட்டவர்களது சடலமும் அதே வைத்தியசாலையின் பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முற்றுமுழுதாக இராணுவ முகாம்களும், காவலரண்களுமென சூழப்பட்ட வல்வெட்டித்துறைப் பகுதியினில் இடம்பெற்ற இவ்அசம்பாவிதம் அப்பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பை உருவாக்கியுள்ளது.

இத்துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தையடுத்து அங்கு பதற்றமான சூழல் இச்செய்தி அச்சாகும் வரை நிலவுகின்றது. சம்பவ இடத்தில் படையினரும், பொலிசாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே மக்கள் திரண்டு வல்வெட்டித்துறை அம்மன் கோவிலடிப் பகுதியினில் நின்றிருந்தனர். மறுபுறத்தே பொலிஸ் வாகனங்கள் தொடர்ச்சியான ரோந்தில் ஈடுபட்டிருந்தன. அத்துடன் இறந்தவர்களின் சடலங்கள் வைக்கப்பட்டுள்ள வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு இராணுவ பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தன.

காயமடைந்தவரும் இம்மருத்துவமனையிலேயே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இரவு வேளைகளில் வெளியார் எவரும் மருத்துவமனைக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

கொல்லப்பட்டவர்களில் ஒருவரான இராஜேந்திரம் சுரேஷ்குமார் என்பவர் தனது இருபத்தோராவது பிறந்த தினத்தை நேற்று முன்தினம் கொண்டாடினார் என்பது குறிப்பிடத்தக்கது. (27, 33)

## திட்ட...

தனமான முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரண்டு அப்பாவி இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் குடும்பஸ்தர் ஒருவரும் படுகாயமடைந்துள்ளார். இந்த அப்பாவி இளைஞர்கள் மீதான படுகொலைச் சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த அப்பாவி இளைஞர்கள் மீதான கொலை வெறியாட்டத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன் இது ஓர் திட்டமிடப்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்ட படுகொலை என்றே நாம் கருதுகின்றோம். இக்கொலைச் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்திற்குள் இராணுவ மினிமுகாம்களும், காவலரண்களும் அமைந்துள்ளன. அடிக்கடி இராணுவ வீதி ரோந்துகளும் இடம்பெற்று வருகின்ற சூழ்நிலையில் இந்த வீதியால் பகிரங்கமாக துப்பாக்கிதாரிகளால் எவ்வாறு நடமாட முடியும். எனவே இச்சம்பவமானது ஓர் திட்டமிட்டகொலையாகும். அத்துடன் இக்கொலைச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் தீவிர இராணுவ கண்காணிப்பில் இருந்து எவ்வாறு தப்பிப்போக முடியும். எனவே இப்பகுதியில் நடந்த இக்கொலைச்சம்பவங்களுக்கு படைத்தரப்பே பொறுப்பேற்க வேண்டும்.

அப்பாவிகள் மீதான கொலைச் சம்பவங்கள் இனியும் தொடராமல் நிறுத்தப்படல் வேண்டும். இதற்குக் காரணமானவர்களை உடன்கண்டு பிடித்து கைது செய்து நீதியின் முன் நிறுத்தவேண்டும். இச்சம்பவமானது சமாதானத்தை எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் மக்களின் மனங்களைக்கொதிப்படைய வைத்துள்ளதுடன் மக்களின் எதிர்பார்ப்புக்களை தவிடுபொடியாக்கியுள்ளது. சமாதானத்திற்கான சூழலையும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாவீரர்...

கல்லறைகள் நடுகற்கள் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களின் பெயர்களையும் தந்துதவுமாறு மாவீரர்களின் பெற்றோர்களை வவுனியா மாவட்ட அரசியல்துறையினர் வேண்டுகின்றனர். (10)

## வரவு...

முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ் (பா.உ) இது தொடர்பாக கூறியுள்ளதாவது: தேர்தலை மையமாக வைத்து இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது போல் தெரிகின்றது. இதில் மக்கள் நலனை விட அரசியல் நலனே முன்நிற்கின்றது என்றார். மலையக மக்கள் முன்னனி தலைவர் பெ.சந்திரசேகரம் (பா.உ) தெரிவிக்கையில், மலையக மக்களின் எதிர்பார்ப்பு இந்த வரவு செலவுத் திட்டத்தில் நிறைவேற்றப்படவில்லை என்றார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.